1274

தொகுதி 10.] 1932ஞு ஜனவரிமீ [பகுதி 12.

7 MAR 1932

மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
கா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியாது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 5-பாகம் விலை ரூபா 10-0-0

அமராவதி 2-ரூபா.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மன மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் டிபப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

'மனமோகினி' நேயர்களுக்கு அறிக்கை.

7 MAR 1932

அன்பர்காள்! நமது 'மனமோகினி'க்கு இந்த ஜனவரி மாத சஞ்சிகையுடன் 10-வது ஆண்டு முடிந்துவிடுகின்றது. இவ்வளவு நீண்டகாலமாக நாம் நமது 'மோகினியை' ஒழுங்காகவும், காலந்தவறாமலும் அனுப்பி நாவல் பிரியர்களுக்கு இன்பத்தை அளித்துவருவது அனைவருக்கும் தெரிந்தவிஷயமே. இறுதியாக இப்போது நடைபெற்றுவரும் 'இரத்தினபுரி ரகசியம்' என்னும் சிறந்தநாவல் இன்னும் இரண்டொரு மாதங்களில் முடிவடைவதாலும், பின்னர் வேறு இனிய நாவலைப் பிரசுரிக்கப்போவதாலும் அன்பர்களனைவரும் அடுத்த வருஷமும் நமது 'மனமோகினி'யை ஆதரிக்க வேண்டியது அவசியமாகும். நேயர்களனைவரும் இன்னும் பலரையும் அடுத்த ஆண்டுக்குப் புதிய சந்தாநேயர்களைச் சேர்த்துக்கொடுப்பதுடன் தங்கள் புதிய ஆண்டு சந்தாவையும் இந்த பிப்ரவரிமாத இறுதிக்குள் அனுப்பிவைத்து விடுவீர்களென்று ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். வி. பி. அனுப்புவதனால் இருதாரப்பினருக்கும் சிரமமாதலால் மணியார்டரை அனுப்பிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். மணியார்டர் கிடைக்காதவர்களுக்கு அடுத்த சஞ்சிகை வி. பி. யில் அனுப்பப்படும். நாவல் பிரியர்களனைவரும் நமது 'மனமோகினி'யை ஆதரித்து நம்மை உற்சாகப்படுத்துவார்களென்று மனப்பூர்வமாக நம்புகிறோம். இதுவரை நம்மை ஆதரித்து வந்த அன்பர்களுக்கு இறைவன் அருள்புரிவானாக!

மானேஜர்.

186564

அப்போது அவனுடைய சகோதரி அவனது நிலையை அறிந்துகொண்டு, 'என தன்புள்ள சகோதரனே! நீ சிறிதும் சந்தோஷக் குறியில்லாமல் ஏதோ கவலையுடன் இருப்பதாகத் தெரிகிறதே?'' என்று கேட்டாள். அதற்கு விசுவநாதன், "சகோதரியே! எந்த விஷயம் என்னைக் கவலைக்குள் ஆக்கியிருக்கிறதென்பது உனக்குத் தெரியாத விஷயமல்ல. சர்தார் சூரியநாயகம் பிரபு எவ்வளவுதூரம் நம்மிடம் அன்புடையவரா யிருக்கிறார் என்பதைக் கவனிக்கும்போது அவ்வளவு தூரம் எனக்கும் அவரிடம் பற்றும் விசுவாசமும் ஏற்படுகிறது. ஆயினும் நாம் இவ்வாறு அவரை அண்டிப் பிழைக்கும் நிலைமைதான் எனக்குப் பிடிக்கவில்லை. என்னசெய்வது? இதுதான் எனக்கு மிக்க கவலையைத் தருகிறது'' என்றான்.

அதற்கு சகோதரி அமிர்தம், "அன்புள்ள சகோதரனே! அதற்கு என்னசெய்வது? வேலப்பனிடமிருந்த உத்தியோகம் போனபிறகு நீயும் எவ்வளவோ முயற்சி செய்துகொண்டிருக்கிறாய். ஆனால் ஒரு சிறு வேலையும் கிடைக்கவில்லை. நீ செய்யும் முயற்சியை நான் அறிந்துதானே இருக்கிறேன். இந்நிலைமையில் சர்தார் சூரியநாயகம் நமக்கு உதவி செய்வதைக் கண்டு அவமானமோ கவலையோ கொள்வதைவிட இத்தகைய நண்பர் ஒருவரை உற்ற சமயத்தில் அனுப்பினாரே என்று எல்லாம் வல்ல ஈசுவரனைப் பிரார்த்திக்க வேண்டும்'' என்றாள்.

185564

விசுவநாதன்:—ஆம்; நான் அப்படித்தான் பிரார்த்திக்கிறேன். அதை உனக்கும் தெரியப்படுத்தி யிருக்கிறேன் அல்லவா? எனினும் நாம் நமது சாப்பாட்டிற்கும், வசிக்கும் வீட்டுக்கும், அணியும் ஆடைகளுக்கும் அவரையே நம்பியிருப்பது மிகக் கேவலமல்லவா என்னும் கவலையே எனக்கு அதிகமாக இருக்கிறது.

அமிர்தம்:—எனதன்புள்ள சகோதரனே! நானும் அப்படித் தான் அவமானமடைந்து கஷ்டப்படுகிறேன். அதற் காகவே நானும் உன்னை அடிக்கடி எனக்கு நான் விரும்பும் தொழில்செய்ய அனுமதிக்கும்படி கேட்கிறே னல்லவா?

விசுவ:—என்ன! ஊசிவேலை செய்து வர்த்தகர்களுக்கு ஆடைகளைக் கொடுத்துப் பணம் பெறுவதாகக் கூறு கிறாய். ஆனால் அது நீ நினைக்கிறபடி சுலபமான வேலை யல்ல. அந்த வேலையை மேற்கொள்வதால் கண்கள் கெட்டுவிடும். அதுவேண்டாம். நான் அன்று சர் தாரைச் சந்தித்தபோது எனக்கு எங்கேனும் ஒருவேலை பார்த்துக்கொடுக்கும்படி கேட்டேன். அவரும் ஏதா வது வியாபாரியிடம் ஏற்பாடு செய்வதாகக் கூறியிருக் கிறார். ஆனால் அவர் பிறகு ஏதேனும் முயற்சி செய் தாரா என்பது தெரியவில்லை. முன்பு அவர் கொடுத்த பணமெல்லாம் செலவாய்விட்டதால் வருத்தப்படு கிறேன். இனி வாய்திறந்து அவரைப் பணம் கேட்க மாட்டேன். நானும் தினசரி வெளியில் சென்று எங் கேனும் வேலை கிடைக்குமா என்று அலைந்து பார்க் கிறேன். ஆயினும் நான் முன்பு இருந்த நிலைமைகளை யெல்லாம் சொல்லும்போது என்னை அவர்கள் வேண்டா மென்று சொல்லிவிடுகிறார்கள். நான் என்னசெய்வேன்? மேலும் நான் தனியாக இருந்தாலும் கஷ்டமில்லை. எப்படியாவது என்னை நான் சமாளித்துக்கொள்வேன். ஒரு பெண்ணாகிய நீ என்னுடன் இருப்பதுதான் எனக்கு கவலையை அதிகப்படுத்துகிறது. உன் கதி யாதாகுமோ என்னும் கவலையால் நான் எங்கும் ஓடிப் போகவும் முடியவில்லை.

அமிர்:—இல்லே, இல்லே, சகோதர! நீ இவ்வாறு கவலேப்பட வேண்டாம். திக்கற்ற நமக்கு கிருபாமூர்த்தியாகிய இறைவன் காப்பாற்றுவான் என்னும் நம்பிக்கையுடன் இருப்போம்.

விசுவ:—ஆ! ஆனல் வேலப்பன் தூக்கில் ஏற்றப்படுவதற்குத் தீவிரமாகவும் உறுதியுடனும் உழைத்த எனக்கும் இறைவன் திருவருள் கிடைக்குமோ என்றுதான் சந்தேகப் படுகிறேன்.

அமிர்:—சகோதரனே! நீ ஏன் இப்படிப்பேசுகிருய். நீ வேலப்பன் விஷயத்தில் என்னகுற்றம் செய்துவிட்டாய் என்பது எனக்குத் தெரியவில்லே. அவ்வளவு பெரிய மன்னிக்கப்படமுடியாத குற்றம் ஏதேனும் செய்திருக்கிருயா?

விசுவ:—சகோதரியே! அது கிடக்கட்டும். என்னே வேலேயில் வைத்துக்கொண்ட எஜமானனுடைய சொற்ப பணத்தையாவது நான் சொந்த அனுபோகம் செய்து கொண்டது பெரிய குற்றமல்லவா?

அமிர்:—ஓ! நீ எனக்காக அல்லவோ அவ்வாறு பணத்தைக் கையாள நேரிட்டது. ஆகவே உன்னுடைய இவ்வளவு வருத்தத்துக்கும் நானே காரணமாகிறேன்.

விசுவ:—நீ குற்றமற்ற பரிசுத்தமானவளாயிற்றே. உன்மீது பழியைச் சுமத்திக்கொள்ளவேண்டாம். அழாதே. நீ கண்ணீர்விட்டால் அதை நான் ஒருநிமிஷமும் பொறுக்க மாட்டேன். நான் உன்னே எவ்வளவுதூரம் நேசிக்கிறேனென்பது உனக்குத் தெரியுமல்லவா? கண்ணேத் துடைத்துக்கொள்.

அமிர்:—ஆம்; நீ அவ்வளவு அன்புடன் இருப்பதனுல்தான் உன்னைக் கடவுள் கைவிடமாட்டார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

விசுவ:—சகோதரியே! ஏன் அழுகிருய். உன் கண்ணீரைக் காண நான் சகிக்கமாட்டேன். அதைரியத்தை விட்டுவிடு. நாம் இருவரும் இப்படி எங்கேனும் உலாவப் போவோம் வா. நீ கவலையை மறந்துவிடு. இன்று முழுதும் நான் உன்னுடன் இருந்தே காலங் கழிக்கிறேன். நாளைமுதல் வேலைக்காகத் தேட ஆரம்பிக்கிறேன். ஆகையால் கவலையை விட்டுச் சிரிப்புடன் இரு.

சகோதரனும் சகோதரியும் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது அவ்வீட்டின் தெருக்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. வெளியிலிருந்தவர் கதவைத் தட்டும் முறையிலிருந்தே அவர் சர்தார் சூரியநாயகமாகவே இருக்க வேண்டுமென்று விசுவநாதன் தீர்மானித்தான். இதற்குள் வேலைக்காரியும் கதவைத்திறந்து பிரபுவை உள்ளே அழைத்து வந்தாள். விசுவநாதன் சர்தாரை வரவேற்பதில் ஆவல் காண்பித்தான்.

உடனே சர்தார் சூரியநாயகம், "என தன்புள்ள விசுவநாதம்! நீ எவ்வாறு இருக்கிருய். அமிர்தம் அம்மாளே! உனது யோகக்ஷேமம் எப்படி? நான் நீங்கள் ஏதேனும் முக்கிய விஷயம் பேசும்போது குறுக்கிட்டுவிட்டேனு?" என்று இருவரையும் நோக்கிக்கேட்டான். அதற்கு விசுவநாதன், "தாங்கள் எப்போது வந்தாலும் எங்கள் விஷயத்தில் குறுக்கிட்டவர் ஆகமாட்டீர்" என்று கூறினன். அமிர்தம் அம்மாள் வாய்திறந்து ஒன்றும் பேசவில்லையென்றாலும் தன் சகோதரன் கூறியதை ஆமோதிப்பவள்போல் காணப்பட்டாள்.

அப்போது சூரியநாயகம் பிரபு, "அப்படியானால் நான் உட்காருகிறேன். நான் வெகுதூரத்திலிருந்து நடந்துவந்திருக்கிறேன். அதுமட்டுமல்ல. சில முக்கிய விஷயங்களைப் பேசவேண்டியதாக இருக்கிறது. நான் நடந்துவந்தேன் என்றால் நீங்கள் நம்பமாட்டீர்கள். ஆனால் உண்மையில் இங்கு வரும்போது வண்டியில் ஆடம்பரமாக வர நான் விரும்பவில்லை. எனக்கும் இப்பால் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையிலேயே அதிக பற்று ஏற்பட்டுவருகிறது. ஆனால் எனது விருப்பங்களைச் சொல்லிக்கொள்ள இப்போது இங்கு வரவில்லை" என்று கூறிக்கொண்டே அங்கிருந்த ஒரு நாற்காலியின்மீது உட்கார்ந்தான். விசுவநாதனும், அமிர்தம் மாளும்கூடத் தங்கள் ஆசனத்தில் அமர்ந்தார்கள். ஆனால் அவர்கள் ஒன்றும் பேசவில்லை. பிரபுவாகப்பேச ஆரம்பிக்கட்டும் என்பது அவர்களுடைய அபிப்பிராயம். ஏனெனின் சில முக்கிய விஷயங்களைப்பற்றிப் பேச வந்திருப்பதாகச் சொன்னானல்லவா? விசுவநாதனை ஏதேனும் வேலையில் வைக்கும் விஷயமாகவே அது இருக்குமென்று அவர்கள் நினைத்து அவன் என்ன பேசப்போகிறானோ என மிக ஆவலுடன் இருந்தனர்.

சர்தார் சூரியநாயகமும், "நான் முன்பு இங்குவந்திருந்த போது ஒரு வர்த்தகஸ்தலத்தில் உன்னை நியமிக்க ஏற்பாடு செய்வதாகச் சொன்னேன். ஆனால் நான் அக்கம்பெனியின் முதலாளியான என் நண்பரை இன்று காலைதான் சந்திக்கமுடிந்தது. பிரதிதினமும் அவரைத் தேடுவதாக நான் முன்பு இங்கு வாக்களித்தேனென்றாலும் இன்றுதான் அவரைக் காணச்சென்றேன்" என்றான். அதற்கு விசுவநாதன், "அன்புள்ள ஐயா! தாங்கள் வேண்டுமென்றே தங்கள் வாக்குறுதியின் விஷயத்தில் அலட்சியமாக இருப்பீர் என்று நினைக்க என்னால் முடியவில்லை. ஏனெனின், நான் தங்க

ளிடமிருந்து எவ்வளவோ உதவிகளைப் பெற்றிருக்கிறேனல்லவா? தங்களுக்குள்ள பல ஜோலிகளில் இவ்விஷயத்தில் கவனம் செலுத்த தங்களுக்குச் சாத்தியப்பட்டிராது என்றே நான் நினைக்கிறேன்'' என்று விநயமாகப் பேசினன்.

அப்போது சர்தார் சூரியநாயகம், "அமிர்தம்! நீயும் அப்படியே கருதுகிருயா?'' என்று கேட்டுக்கொண்டே அவளை உற்றுநோக்கினன். வேறொரு பெண்ணாக இருந்திருந்தால் அவன் அவ்வாறு பார்த்திருக்கமாட்டான். ஆனல் அமிர்தம்மாளிடம் மட்டும் அவனுக்கு அதிக பிரேமையும் மதிப்பும் இருந்ததால் அவளைக் கருத்துடன் நோக்கினன். அதற்கு அப்பெண்மணியும், "ஆம்; என் சகோதரன் நினைத்ததுபோல் நானும் நினைக்கிறேன். ஏனெனின் தங்களைப் போன்ற பெரிய மனிதர்களுக்குப் பல ஜோலிகள் இருக்கும் என்பது தெரிந்தவிஷயம். ஆகவே தாங்கள் இதைக் கவனிக்கச் சாத்தியப்பட்டிராது'' என்று மெல்லியகுரலில் மெதுவாகப் பேசினள்.

சர்தார் சூரியநாயகம், "ஓ, அப்படியல்ல. நான் எப்போதும் என் நண்பர்களை மறந்துவிடும் வழக்கமில்லை. அவர்களை மறந்துவிடமாட்டேன். எப்போதும் அவர்கள் எதிரில் இல்லை என்பதற்காக அவர்களை மறந்துவிடமாட்டேன். எப்போதும் அவர்களுடைய ஞாபகம் எனக்கு இருக்கும். நாம் விஷயத்தைக் கவனிப்போம். எனது நண்பராகிய கம்பெனியின் முதலாளியை இன்று கண்டு பேசினேன். அவரிடம் எல்லா விஷயங்களையும் விளக்கிக் கூறினேன். அவருக்கு இதர தேசங்களிலும் பல கிளைஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றின் மானேஜர் தனக்கு உடனே ஒரு கௌரவமான வாலிபன் தேவை என்று முதலாளிக்கு எழுதியிருப்பதாகத் தெரிகிறது. ஆனல் அது எந்த தேசம்

என்பது ஞாபகத்துக்கு வரவில்லை சம்பளம் வருஷவாரி நூற்றைம்பது பவுன் என்று தெரிகிறது. வேலை செய்பவரின் யோக்கியதைக்குத் தக்கபடி சம்பள உயர்வும் அளிக்கப்படும். ஆங்கிலபாஷை ஒன்று தெரிந்தாலும் போதும். உனக்கு இந்த வேலை கிடைத்தாய்விட்டதாகவே வைத்துக் கொள். இதோ இந்தக் கார்டைக்கொண்டுபோய் சுண்ணம்புகாரத் தெருவிலுள்ள சாப்மன் கம்பெனி முதலாளிக்குக் காண்பித்தால் போதும்'' என்று தான் செய்த ஏற்பாடுகளை விவரமாகக் கூறினன்.

இதைக்கேட்டு விசுவநாதன் அளவிலா சந்தோஷமடைந்தான். அமிர்தாம்மாளும் சந்தோஷமும் திருப்தியும் அடைந்தாள். சகோதரனும் சகோதரியும் சர்தார் சூரியநாயகத்துக்கு அளவிலா நன்றிசெலுத்தினர். அமிர்தம்மாள் அதிக உணர்ச்சியை அடைந்தபடியால் அதிகமாகப் பேசமுடியாமல் திக்குமுக்காடினுள். இதை நன்ருக உணர்ந்துகொண்ட சர்தார், "அன்பர்களே! நீங்கள் உள்ளத்தில் நினைப்பதையும், சொல்ல விரும்புவதையும் நான் அறிந்துகொண்டேன். விசுவநாதன்! நீ உடனே நகருக்குப் புறப்படு. இன்று பகல் நீ வந்து காண்பாய் என்று நான் முதலாளியிடம் சொல்லியிருக்கிறேன். செலவைப் பார்க்காதே. விரைவாகச் செல்லக்கூடிய வண்டியை அமர்த்திக்கொண்டு செல். நான் இன்று முழுதும் உங்களுடனேயே காலத்தைக் கழிப்பதாக முடிவு செய்திருப்பதால் நீ எவ்வளவு விரைவில் திரும்பிவர முடியுமோ அவ்வளவு விரைவில் வந்துவிடு. இப்போது ஒருமணி. நீ நாலுமணிக்குள் வந்துவிடு. பிறகு தான் நாம் சாப்பிடுவோம். ஓ! நானுக உங்களுடன் சாப்பிட விரும்புவதை அமிர்தம்மாள் விரும்பவில்லைபோ லிருக்கிறதே'' என்ருன்.

அப்போது அப்பெண்மணி, "ஐயா, சர்தார் சூரியநாயகம் பிரபுவே! அப்படி நினைக்கவேண்டாம். தாங்கள் இங்கு சாப்பிடுவதை நான் விரும்பவில்லை என்று வைத்துக்கொள்வதாயினும் அதற்கும் ஒரு காரணமிருக்கிறது. அதாவது தங்களுக்கு எத்தகைய விருந்தளிக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோமோ அப்படிப்பட்ட விருந்தை யளிக்கமுடியாதே என்று வருந்துகிறேன்," என்று கூறினாள். அதற்கு சர்தார், "பெண்மணி! நான் முன்பு இங்கு வந்திருந்தபோதே எனது பழக்க வழக்கங்களெல்லாம் மிக எளிமையானவையாகப் போய்விட்டன என்று தெரிவித்திருக்கிறேனல்லவா? ஆகவே ஆகாரம் எவ்வளவு எளிமையானதா யிருந்தபோதிலும் பரவாயில்லை. அதற்காக நீ வருத்தப்படவேண்டாம். விசுவநாதா! நீ காலந் தாழ்த்தவேண்டாம். உடனே புறப்படு. நீ திரும்பி வரும்வரையில் நான் இங்கு இருக்க அனுமதிப்பாய் என்று நம்புகிறேன்" என்றான்.

வாலிபனான விசுவநாதன், "தாங்கள் இங்கு இருப்பதாக யோசித்திருப்பதுபற்றி நான் மிகச் சந்தோஷப்படுகிறேன்" என்று கூறிக்கொண்டே சர்தாரைப் பார்த்தபார்வையானது, "ஐயா! தங்களைத் தனியாக என் சகோதரியுடன் விட்டுப்போவதில் எனக்குச் சிறிதும் அச்சமில்லை. தாங்கள் ஒருகாலத்தில் ஒழுக்கமற்ற வாழ்க்கையை நடத்தியபோதிலும் இப்போது நீங்கள் பெற்ற அனுபவத்தாலும், என் சகோதரியிடம் நீங்கள் காண்பிக்கும் மரியாதையாலும் நீங்கள் பரிசுத்தமற்ற எண்ணத்துடன் அவளைப்பார்ப்பீர் என்று நான் நினைக்கவேயில்லை" என்று கூறுவதுபோலிருந்தது. விசுவநாதனும் போய்விட்டான். சர்தாரும் அமிர்தம்மாளும் தன் வீட்டில் தனியாக இருந்தனர்.

சர்தார் சூரியநாயகமும் அமிர்தம்மாளும் தனியே இருப்பதைக் கண்டே சர்தார் அப்பெண்ணினிடம், "நான்

இங்கே உட்கார்ந்துகொண்டு உன்னுடன் பேசிக்கொண் டிருக்கையில் நீ மீண்டும் உன் வேலையைக் கவனிக்கலாம்,'' என்று யோசனை கூறினன். தனியே இருந்த அமிர்தம்மாள் என்னசெய்வதென்று தெரியாமல் வெட்கப்பட்டுக்கொண் டிருந்தபடியால் அவன் சொன்ன யோசனையால் அவளுக்கு அதிக சந்தோஷம் ஏற்பட்டது. மேலும் சர்தாரைப் பார்க்க வெட்கப்பட்ட அவள் அவ்வேலையைக் கவனிப்பதற்காக வேனும் தலை குனிந்துகொள்ளும்படியான சந்தர்ப்பம் ஏற் பட்டதால் ஒருவாறு ஆறுதலடைந்தாள்.

சொற்பநேரம் இருவரும் பேசாமல் இருந்தனர். பிறகு சர்தார் அவளிடம், "அமிர்தம்! உன் சகோதரனுக்காக நான் செய்த ஏற்பாட்டை நீ ஒப்புக்கொள்கிருயா இல்லையா என் பதைத் தெரிவி. விசுவநாதனுக்கு என்னசம்பளம் கொடுப் பார்களென்பதை நான் நிச்சயமாகச் சொல்லமுடியவில்லை யெனினும் நான் சொன்னதற்கும் குறைவாகக் கிடைக்கா தென்பது நிச்சயம். நான் விரும்பியிருந்தால் விசுவநாதனை இரத்தினபுரி ஆபீசிலேயே வைத்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்திருப்பேன். ஆனல் முன்பின் நடந்த விஷயங்களை யெல்லாம் கவனித்தே அவன் சொற்பகாலமேனும் வெளி யூரில் வேலைசெய்வதே நலமெனக் கருதினேன். பழைய சம்பவத்தைப்பற்றி அவன் எவ்வளவுதூரம் மனவருத்த மடைகிருன் என்பதை நான் அறிவேன். ஆகவே அவன் இனியேனும் ஒழுங்காக வேலைசெய்து இழந்துபோன நல்ல பெயரைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டால் பிறகு சௌ கரியமாக இருக்கும். ஆதலின் நான் அவனுக்கு வெளியூரில் வேலை சம்பாதித்ததன் காரணம் இப்போது உனக்குத் தெரிந் திருக்குமென்று நம்புகிறேன்,'' என்று விவரமாகக் கூறி னன்.

அமிர்:—சர்தாரே! உமது யோசனைகளையும் செயல்களையும் நான் மிகவும் பாராட்டுகின்றேன். தாங்கள் எங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்னும் நல்லெண்ணத்துடனேயே இவ்வாறு 'ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன்.

சர்தார்:—உன் சகோதரனுடன் நீயும் வெளிதேசம் செல்லப் போகிறாயா என்பதை இப்போது தெரிவித்துவிடு.

அமிர்:—ஓ! என்னிடம் இவ்வளவு அன்புடன் இருக்கும் என் சகோதரனுடன் இவ்வுலகின் எப்பாகத்திற்கும் செல்லச் சிறிதும் பின்தயங்கமாட்டேன்.

சர்தார்:—அப்படியா! உலகத்தின் எந்தப் பாகத்திற்கும் செல்வாயா? அவ்வாறாயின் நீ இரத்தினபுரியை விட்டுச் செல்லத்தயாராக இருக்கிறாய் போலும். இரத்தினபுரியிலேயே இருக்கும்படி உன்னைக் கட்டுப்படுத்தக்கூடிய தொன்றுமில்லையென்று நினைக்கிறேன்.

அமிர்:—அப்படியல்ல. தங்கள் வீட்டின் சொந்தக்காரியை எனக்குச் செய்த உதவிக்காக நான் எப்போதும் மறக்கமுடியாது. ஆதலின் நான் இரத்தினபுரியைவிட்டுப் புறப்படுவதற்குமுன் அம்மாதைக் காணத் தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்தார்:—தடையில்லாமல் நீ அம்மாதைப் பார்க்கலாம். அவள் எவ்வளவு நல்லவள்; எவ்வளவு சுயநலமற்றவள் என்பதைக் காட்ட அவள் சமீபத்தில் நடந்துகொண்ட ஒருவிதத்தை எடுத்துக் காட்டுகிறேன், பார். சுமார் பதினைந்து தினங்களுக்குமுன் நான் மதனவல்லியைப் பார்ப்பதற்காக அவளுடைய மாளிகைக்குச் சென்றேன். அதுதான் கடைசிமுறையாக அவளைப்பார்த்து,

அதன்பிறகு அவள் ஒரேயடியாக இக்கரை விட்டுப் போய்விட்டாள். அப்போது அவள், தன் வாழ்க்கையில் நல்ல மாறுதலை ஏற்படுத்திக் கொள்ளப்போவதாகத் தெரிவித்தாள். அப்போது நானும் அவ்வாறே தீர்மானித்திருப்பதாக அவளிடம் தெரிவித்தேன். அன்று மத்தியானம்தான் உன்னைக் காணவும், உன்னுடன் இது விஷயமாக ஆலோசிக்கவும் இங்கே வந்தேன். ஆனால் அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்காமலும் போய்விட்டதற்குக் காரணமென்னவென்பது ஞாபகமில்லை. மறுபடியும் ஒருநாள் நான் அதே எண்ணத்துடன் இங்கு வந்தபோது கடைசிவரை உன் சகோதரன் கூடவே இருந்ததால் அதைப் பிரஸ்தாபிக்க முடியவில்லை. இன்று காலை நான் இங்கு வருவதற்காகப் புறப்படும்போது என் வீட்டுச் சொந்தக்காரியிடம் நான் ஒரு விஷயம் சொல்லவேண்டுமெனத் தெரிவித்தபோது அவள் மிக ஆவலுடன் அதைக் கேட்கவந்ததுடன் என் இரகசியத்தை அவளிடம் சொல்ல நான் முன்வந்ததைக்கண்டு அவள் மிகவும் சந்தோஷமடைந்தாள். அவளிடம் நான், இப்பால் சில மாதங்களாக நான் என் பழக்க வழக்கங்களையெல்லாம் மாற்றிக்கொண்டு வருவதாகவும், உறுதியான மனப்பான்மையை யுடையவனாக மாறி வருவதாகவும், பழைய சினேகிதர்களை நான் விட்டுவிட்டேனென்றும் தெரிவித்தேன். இதைக்கேட்டு அவள் மிகவும் சந்தோஷப்பட்டாள். பிறகு நான் கலியாணம் செய்துகொள்வது நலமல்லவா என்று அவளைக் கேட்டேன். என்ன உன் வேலையைக் கீழே போட்டுவிட்டாயே.

உண்மையிலேயே அமிர்தம்மாள், கலியாணம் என்று பேச்சுவந்ததும் வெட்கப்பட்டுத் தன் கையிலிருந்த ஊசி

யைக் கீழே விட்டுவிட்டாள். எனினும் உடனே அவள் அதை எடுத்துக்கொள்வதற்காகக் குனிந்தாள். சர்தாரும் அதை எடுத்துக்கொடுக்கும் நோக்கத்துடன் குனிந்ததால் இருவருடைய கன்னங்களும் ஒன்றோடொன்று முட்டிக் கொண்டன. எனினும் அவள் நிமிர்ந்து தன் வேலையை ஆரம்பித்தாள்.

அப்போது மீண்டும் சர்தார் சூரியநாயகம் பின்வருமாறு பேசலானான்:—"நான் கலியாணம் செய்துகொள்ளலாமா என்று கேட்டதற்கு அவள், அதுதான் சரியானவழி என்றும், முன்பேதான் இவ்வாறு யோசனை கூறியிருப்பதாகவும் தெரிவித்தாள். நான் விவாகம் செய்துகொண்டு என் மனைவி வீட்டுக்கு வந்தால் என்னிடம் அவளுக்குள்ள செல்வாக்கு குறைந்துவிடுமே என்று கேட்டதற்கு அவள் சிறிதும் வருத்தப்படாமல் தான் சந்தோஷப்படுவதாகவே தெரிவித்தாள். இதனால் நீ அவளைப்பற்றி என்ன நினைக்கிறாய்?

அமீர்:—அவள் சுயநலமற்றவள். அவள் எப்போதும் இவ்வாறே நடந்துகொள்வாள் என்றுதான் நான் எதிர்பார்த்தேன்.

சர்தார்:—சரி; அப்படியானால் நான் விவாகம் செய்துகொள்வதுபற்றி உன்னுடைய அபிப்பிராயமென்ன? நான் யாரை நேசிக்கிறேனோ அப்பெண்மணிக்கு வேண்டிய சௌகரியங்களை அளிக்கவல்ல சக்தி எனக்கு இருக்கிறதென்றுவது நீ நம்புகிறாயா?

அமீர்:—உண்மையில் நீங்கள் அவளை நேசிப்பதாக இருந்தால் அவளுக்கு வேண்டிய சௌகரியங்களைத் தாங்கள் அளிப்பீர் என்பது நிச்சயம்.

சர்தார்:—தடையில்லாமல் நான் அவளை நேசிக்கிறேன். பல தினங்களாகவே அவளை நேசித்துக்கொண்டிருக்கிறேன்.

இப்போது நான் அவளை விவாகம் செய்துகொள்வதென்றும், என்னுடைய ஆஸ்தியையெல்லாம் அவளிடம் பாதகாணிக்கையாகச் செலுத்திவிடுவதென்றும் தீர்மானித்திருக்கிறேன். எனதன்புள்ள அமிர்தம்! அப்பெண்மணி யார் தெரியுமா? நீ என்னுடையதாகமாட்டாயா?

உடனே அமிர்தம்வெட்கத்தால் நடுநடுங்கியதால் பழையபடி அவள் கையிலிருந்த ஊசி கீழே விழுந்துவிட்டது. ஆனால் இம்முறை அதை எடுக்க யாரும் முயலவில்லை. ஏனெனின், சர்தார் சூரியநாயகம் மேற்கூறியவாறு கூறிக்கொண்டே தன் காத்தால் அவளைப்பற்றித் தன் மார்போடு அணைத்துக் கொண்டான். அவள் உடனே விடுவித்துக்கொள்ள முயலாமையால் அவளும் அவனை நேசிக்கிறாள் என்றும், விவாகம் செய்துகொள்ள ஒப்புகிறாளென்றும் தெரிந்துவிட்டது.

இரத்தினபுரி நகருக்குச் சென்ற விசுவநாதன் திரும்பி வந்தபோது சர்தார் சூரியநாயகமும், தன் சகோதரி அமிர்தம்மாளும் ஒரு அறையின் ஜன்னலருகில் உட்கார்ந்து கொண்டு உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டான். அவனைக் கண்டதும் சர்தார், "விசுவநாதா! நீ ஒரு உத்தியோகத்தைத் தேடுவதற்காக நகரத்துக்குச் சென்றிருந்த வேளையில் நான் என் மனைவியாய் இருப்பதற்கென ஒரு அழகிய பெண்ணைத் தேடிக்கொண்டேன். அமிர்தம் என்னுடைய யோசனைகளையெல்லாம் ஒப்புக்கொண்டுவிட்டாள். நீ மட்டும் மறுக்காமலிருப்பாயின் அவள் ஸ்ரீமதி. அமிர்தம் சூரியநாயகமாகிவிடுகிறாள்," என்று கூறினான்.

அப்போது விசுவநாதன் சர்தாரிடம், "பெருந்தன்மையும் தயாளகுணமும் மிக்க பெரியாரே! தாங்கள் செய்த ஏற்பாட்டிற்காக நான் மிகவும் பெருமையும் சந்தோஷமும்

அடைகின்றேன்,'' எனக் கூறிவிட்டுத் தன் சகோதரியை நோக்கி, "எனதன்புள்ள சகோதரியே! நீ சர்தார் சூரிய நாயகம்பிரபுவைக் கணவனுகப் பெறப்போவதற்காக நான் உன்னை மனமார வாழ்த்துகின்றேன். அவர் எனக்காகப் பார்த்திருக்கும் வேலை உபாயமானதல்ல. அக்கிளைக் காரியாலய மானேஜராகவல்லவோ என்னை நியமித்திருக்கிறார்கள். வருமானமும் வருஷவாரி நூற்றைம்பது பவுன் வருமானம் கிடைக்கும். மேலும் எனக்காகச் சர்தார் பிரபு ஐயாயிரம் பவுன் செகியூரட்டி கட்டியிருக்கிறார். இவ்வளவு பெருந்தன்மையும் தயாளகுணமும் வேறெங்கே காணமுடியும்,'' என்று சந்தோஷத்துடன் கூறினுன்.

அமிர்தம்மாள் அளவுகடந்த சந்தோஷமுடையவளாய்ப் போனதால் வாய்திறந்து ஒருசொல் பேசவும் அவளால் முடியவில்லை. ஆனுல் அவள் சர்தாரின் கையைப் பிடித்து அதைத் தன் உதட்டின்மீது வைத்தழுத்தித் தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தாள். அவளுடைய இச்செயலானது அவள் பேசுவதைவிட ஆயிரம் மடங்கு அதிகமாக அவளுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிட்டது.

அன்று மாலை சர்தார், அமிர்தம், விசுவநாதன் ஆகிய மூவரும் என்றுமில்லாச் சந்தோஷத்துடன் இன்பமாக ஆகாரத்தை அருந்தினர். சர்தார் அமிர்தம்மாளின் பக்கத்தில் உட்கார்ந்து ஆகாரமருந்தியபோது இகலோக சுவர்க்கத்தில் இருப்பதாகவே கருதினுன். அவன் அன்றிரவு இரத்தினபுரிக்குப் போய்விடவில்லை. அமிர்தம்மாள் அவனைக் கலியாணம் செய்துகொள்வதாக அவளுடைய வாயால் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று காத்திருந்தான். அவளும் அவ்வாறே ஒப்புக்கொண்டு மூன்றுவாரத்துக்குள் விவாகத்தை நடத்துவதென்றும் முடிவு செய்தார்கள்.

179 - வது அத்தியாயம்

இப்போது நாம் பரிதிபுரத்தில் பைத்தியக்காரிகளாய்ப் போன இரங்கம்மாள், ஜானகி ஆகியவர்களின் நிலைமையைக் கவனிப்போம். பரிதிபுரத்துக்குச் சுமார் இரண்டு மைல் தூரத்தில் தூயவெண்மையான அழகிய மாளிகை யொன்று காணப்பட்டது. அம்மாடியின்மீது நின்றால் பரிதி புரத்துக்கடுத்த விசாலமான ஏரியும், அதைச் சுற்றிலுமுள்ள பெரிய மைதானமும் மிக்க அழகிய தோற்றத்துடன் தென் படும். நாம் மேலே குறிப்பிட்ட மாளிகை மிக்க விஸ்தார மானது. பெரிய பணக்காரர்களின் அதிக ஜனங்கள் நிரம் பிய பெரிய குடும்பத்துக்கு வேண்டியதைவிடப் பெரிய தாகவே அம்மாளிகை இருந்தது. அக்கட்டடம் டாக்டர் திம்மன் என்பவருடைய பைத்தியக்கார ஆஸ்பத்திரியாகும். அம்மாளிகையின் அறைகளில் ஒன்றில் அதன் இரும்புக் கம்பிகளாகிய ஜன்னலின் அருகில் இருமாதர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தனர். அம்மாதர்களிருவரும் அழகிய ஆடை களையே அணிந்திருந்தார்கள். அவ்வறையும் நன்றாக அலங் கரிக்கப்பட்டிருந்தது. அறையின் மத்தியில் அலங்கரிக்கப் பட்ட மேஜையொன்று இருந்தது. அதில் புஸ்தகங்கள், படங்கள், பழங்கள் முதலியன ஒழுங்காகவே வைக்கப்பட் டிருந்தன. அறையின் ஒரு மூலையில் மூன்று படுக்கைகள் இருந்தன. அறைக்கதவின் அருகில் சிறிது வயதுசென்ற ஒருமாது புஸ்தகத்தைப் படித்துக்கொண்டு உட்கார்ந்திருந் தாள். ஆனால் அவள் அடிக்கடி ஜன்னல்பக்கம் திரும்பிப் பார்த்து அங்கே உட்கார்ந்திருந்த இருமாதர்களும் என்ன செய்கின்றனவெனக் கவனித்து வந்தாள்.

ஜன்னலருகில் உட்கார்ந்திருந்த இருமாதர்களும் மரகதவல்லியின் குமாரிகளான இரங்கம்மாளும், ஜானகியும்தான் என்பதை நேயர்கள் அறிந்துகொண்டிருக்கலாம். அவர்களிருவரும் இளவரசிக்கு எவ்வளவோ கஷ்டங்களையெல்லாம் உண்டாக்கியும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் 'மறந்துவிடு, மன்னித்துவிடு' என்னும் தெய்வக் கொள்கையைப் பின்பற்றி, அம்மாதர்களிருவரும் பொது ஆஸ்பத்திரியில் இருக்கவேண்டாமென்று சொல்லி டாக்டரின் அதிக கவனத்துக்குட்பட்டவர்களாயிருக்கவேண்டுமென்று தனி நபரின் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப ஏற்பாடு செய்தாள். டாக்டர் திம்மனும் மிக்க பெருந்தன்மையும் தாராள நோக்கமும் வாய்ந்தவர். அவர் வியாதியஸ்தர்களின் நிலைமையைத் தக்கவாறு ஆராய்ச்சி செய்து நிதானமாகப் பரிகாரம் தேடக்கூடியவர். அந்த ஆஸ்பத்திரியில் ஆண்களுக்கென்றும், பெண்களுக்கென்றும் இரண்டு பிரிவுகளுண்டு. ஒவ்வொரு பிரிவிலும் அனேக அறைகள் உண்டு. சிற்சில அறைகளில் இரண்டுபேரும் வேறு சில அறைகளில் ஒருவரும் இருப்பதுண்டு. ஆகவே இந்த இரு சகோதரிகளும் ஒரு அறையில் வைக்கப்பட்டனர். அவர்களைக் கவனிப்பதற்காக ஆஸ்பத்திரி வேலைகளில் நன்கு பழக்கப்பட்ட ஒருமாது அமர்த்தப்பட்டாள். அவர்கள் சாப்பிடும்போதும், தனியாக உட்கார்ந்திருக்கும்போதும், அலையும்போதும் அவர்களுடனேயே இருந்து அவர்களுக்கு ஆகவேண்டிய வேலையைச் செய்வது தான் அம்மாதின் கடமையாக இருந்தது.

இரங்கம்மாளும், ஜானகியும் டாக்டர் திம்மனின் ஆஸ்பத்திரிக்கு வரும்போதே அவர்களுடைய பைத்தியம் ஒருவாறு தெளிந்துவந்தது. இங்கு வந்தபிற்பாடு டாக்டர் திம்மன்

அன்புடனும், இனிய வகையிலும் கவனித்து வந்தபடியால் அவர்களுடைய மனம் ஒருவாறு அமைதியை அடைந்திருந்தது. இந்தப் பிரத்தியேக ஆஸ்பத்திரிக்கு வந்து ஆறுவாரங்களுக்குள் அவர்கள் கூடியவரை சொஸ்தமடைந்தார்களென்றாலும் அவர்களுடைய பைத்தியம் முற்றும் நீங்கிவிடவில்லை. ஆனால் பைத்தியத்தின் கொடுமை அடங்கிவிட்டதென்றே கூறலாம். அவர்களுடைய உயிருக்குப் பயமில்லாமற் போய்விட்டது. அவர்கள் பரஸ்பரம் இன்னுரென உணர்ந்து கொண்டு சதா ஒன்றுகூடியே இருந்தனர். அவர்கள் சதா சர்வகாலமும் ஒருவர் அருகில் ஒருவர் இருக்கவே விரும்பினர். ஒருத்தி செய்யும் காரியத்தையே மற்றொருத்தியும் பின்தொடர்வாள். இரங்கம்மாள் ஜன்னலருகிலிருந்து எழுந்து மேஜையினருகில் சென்றால் ஜானகியும் அப்படியே செய்வாள். ஜானகி சிறிதுநேரம் பியானே வாத்தியக்கருவியை வாசித்தால் இரங்கம்மாளும் அவ்வாறே செய்வதுடன் அதே பாட்டையே வாசிப்பாள். அவ்வாறே இருவரும் புஸ்தகங்களையும் உபயோகிப்பார்கள். காலையில் எழுந்தது முதல் இரவில் படுக்கும்வரையில் ஒருத்தியைப் பார்த்து மற்றொருத்தி அதேவேலையைச் செய்துவந்தார்கள். ஆனால் அவர்களிருவரும் பேசியதேயில்லை. அப்படி ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் பேசினாலும் பைத்தியக்காரிகளைப்போலவே சம்பந்தமில்லாத, அரைகுறையான பேச்சுகளையே பேசுவார்கள்.

இந்த இருமாதர்களும் இளவரசிக்கு விரோதமாக எவ்வளவு காரியங்களைச் செய்திருக்கிறார்களென்பது இராஜம்மாள், மூன்று வேடர்கள் ஆகியவர்களின்மீது வழக்கு நடந்தபோது வெளியான செய்திகளால் அறிந்த பரிதிபுரவாசிகள் இளவரசியின் பெருந்தன்மையையும், தயாளகுணத்தையும் கண்டு வியந்தார்கள். ஆயினும் அதர்மம் ஓங்கியிருக்கும்

காலத்தில் எப்படி தர்மவான்களுக்கே அதிககஷ்டம் சம்ப விக்குமோ அதுபோல இளவரசி செய்த நன்மைகளெல்லாம் அவளுக்கே தீமை தரக்கூடியனவாயிருந்தன. சில வீண் வம்பர்கள், அவள் செய்யும் நன்றிக்கு வேறுவிதமான பொருள் கொடுத்து, இளவரசி ஏதோ அக்கிரமங்களைச் செய் திருப்பாளென்றும், அது அம்மாதர்களிருவருக்கும் தெரிந் திருக்குமென்றும், அவர்கள் சொஸ்தமடைந்தபின் அந்த ரக சியத்தை வெளியிடாம லிருக்கும்பொருட்டு அவர்களுக்கு இப்போது இளவரசி மிதமிஞ்சிய உதவிசெய்வதாகவும் அப வாதமாகப் பேசிக்கொண்டார்கள். முன்பு பலராமனைத் தன் னிடம் வேலைக்கு அவள் நல்லெண்ணத்துடன் வைத்துக் கொண்டது போதும் இவ்வாறே வீண் அபவாதம் சுமத்தி ணர்கள். இவ்வாறு கூறுவது உலக இயல்பு. எவருமே உலகத்தையே தன் மனோபாவத்தை அளவு கோலாகக் கொண்டே அளந்து பார்ப்பது சுபாவம். அயோக்கியர் களும் திருடர்களும் உயர்ந்த மகான்களையும் அயோக்கியர்க ளென்றும், திருடர்களென்றுமே கருதுகின்றனர். ஆதலின் பரிதிபுரத்திலுள்ள சில அயோக்கியர்கள், வீண்வம்பு பேசு வதில் காலங்கழிப்பவர்கள், இளவரசியின்மீது பழி கூறியதில் ஆச்சர்யமொன்றுமில்லை.

இவ்வாறு இரங்கம்மாளும் ஜானகியும் டாக்டர் திம்ம னின் ஆஸ்பத்திரியின் அறையில் ஜன்னலருகில் உட்கார்ந்து வெளியில் உற்றுக் கவனித்துக்கொண் டிருந்தபோது, அந்த ஆஸ்பத்திரியை நோக்கி அவர்களின் தாயார் மாகதவல்லியும், சகோதரி மீனம்பாளும் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்க ளிருவரும் பரிதிபுரம் வந்து சுமார் ஒருமாதகாலமாகியும் தின சரி டாக்டர் திம்மனைக்கண்டு, இரங்கம்மாள், ஜானகியுடன் பேச அனுமதி கேட்டும், டாக்டர் அவர்களுடைய மனோ

நிலைமையை உத்தேசித்து இவர்களைக் கண்டு பேசினால் மனம் குழப்பமடைந்துவிடுமெனக் கருதி அனுமதியளிக்க மறுத்து வந்தார். பைத்தியக்காரிகளின் நன்மையை உத்தேசித்தே டாக்டர் இவ்வாறு கூறியதால் அவர்களும் ஆத்திரப்படாமல் பொறுமையுடன் இருந்தனர். எனினும் டாக்டர் அனுமதிப்பாரோ என்னும் ஆவலினால் தினசரி வந்து டாக்டரைக் காணுவதாக இருந்தனர்.

நாம் மேலேகுறித்த தினத்தில் தாயும் மகளும் ஆஸ்பத்திரியை நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தபோது மீனும்பாள் தன் தாயைப்பார்த்து, "அம்மா! இன்று நாம் இருவரும் எனது சகோதரிகளைப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்குமென்றே நான் நினைக்கின்றேன்," என்று சொன்னாள். அப்போது அவளுடைய கண்களினின்றும் கண்ணீர் சொட்டிற்று. அதைக்கண்ட தாயார் மரகதவல்லி, "அம்மா குழந்தாய்! இவ்வாறு வருத்தப்படவேண்டாம். நீ வருத்தப்பட்டுக் கண்ணீர் விடுவதால் நானும் துக்கப்படும்படி நீ செய்கின்றாய். என் மனம் உன் செயலால் உருகுகின்றது," என்று கூறினாள். அதற்கு மீனும்பாள், "அம்மா! என்னுடைய துக்கத்தை அடக்கிக்கொள்ள என்னால் முடியவில்லை. ஆதலின் இங்கேயே சிறிதுநேரம் உட்கார்ந்திருந்து நம்மை நாமே தேற்றிக்கொண்டு பிறகு இங்கிருந்து புறப்படுவோம்," என்று யோசனை கூறினாள்.

அதன்படியே தாயும் மகளும் அங்கிருந்த ஒரு பெரிய மரத்தடியில் உட்கார்ந்து தங்கள் துக்கமெல்லாம் அடங்கும்படி பூரணமாக அழுது தீர்த்துவிட்டுப் பின்னர் தங்களைத் தாங்களே ஆற்றிக்கொண்டனர். அவர்கள் உட்கார்ந்த இடம் முக்கிய ரஸ்தாவின் ஓரத்தில் இருந்தது. என்றாலும் அவர்கள் துக்கத்தின் மிகுதியால் எதிரில் நடப்பதொன்றை

யும் அறியாமலிருந்ததால் அவ்வழியே பரிதிபுரத்தை நோக்கிச் சென்ற வண்டியை அவர்கள் கவனிக்கவில்லை. அந்த வண்டியில் இரத்தினபுரியைச் சேர்ந்த ஒரு அழகிய இளைஞன் உட்கார்ந்திருந்தான். அந்த வண்டி அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தில் வந்ததும் வண்டியின் ஜன்னல்மூலம் அவன் அம்மாதர்களைப் பார்த்துவிட்டான். உடனே வண்டியை நிறுத்தும்படி வண்டிக்காரனிடம் கூறினான். அவன் கூறியதைக் கேட்ட அம்மாதர்களிருவரும் திடீரென்று விழித்துக்கொண்டு தங்கள் கண்களைத் துடைத்துக்கொண்டே அங்கிருந்து அவசரமாக நடந்துசெல்ல ஆரம்பித்தனர். ஆயினும் அவன் உடனே வண்டியிலிருந்து கீழேகுதித்து அம்மாதர்களைக் கண்டு மிகப் பணிவுடன் வணக்கம் செலுத்தி மரியாதையாகவும் தாழ்மையுடனும் பேசினான். அவன் நடந்துகொண்ட மாதிரியில் யாரும் அதை அலட்சியப்படுத்திவிட்டு அப்பால் செல்லமுடியாமலிருந்தது.

அவ்விளைஞன் அம்மாதர் இருவரையுங் கண்டு, "மாதர்களே! என்னை மன்னியுங்கள். உங்களைப் பார்த்த மாத்திரத்தில் நீங்களும் என் தேசத்தைச் சேர்ந்தவர்களென்று தெரிகிறது. அன்னியநாடாகிய இங்கு நீங்கள் துக்கப்படுவதைக் கண்ட நான், உங்களுக்கு என்னால் ஏதேனும் சகாயம் வேண்டுமா என்று கேட்காமல் அப்பால் செல்ல என் மனம் இடம் தரவில்லை. என் உதவி எதையேனும் எதிர்பார்க்கிறீர்களோ?" என்று பரிவுடன் கேட்டான்.

மரகதவல்லி:—ஐயா! நீங்கள் இவ்வாறு கேட்டதற்காக என் சார்பாகவும் என் குமாரியின் சார்பாகவும் உங்களுக்கு வந்தனமளிக்கிறேன். அன்புள்ள அனுதாபியினாலும் பரிகரிக்கப்படமுடியாத துக்கத்தில் நாங்கள் ஆழ்ந்திருக்கிறோம்.

வாலிபன்:—அம்மணி! உங்கள் சமாசாரங்களையெல்லாம் அறிந்துகொள்ள வேண்டுமென்னும் கெட்ட எண்ணத்துடன் நான் உங்கள் விஷயத்தில் பிரவேசிக்கவில்லையென்று நிச்சயமாகக் கூறுகின்றேன். அனுதாப மிகுதியாலேயே அவ்வாறு கேட்டேன்.

அம்மாது:—அப்படிப்பட்ட உறுதிமொழி யொன்றும் அவசியமில்லை. நீங்கள் எங்களுடைய விஷயத்தில் இவ்வளவு அனுதாபங்காட்டி, எங்கள் துக்கத்துக்குக் காரண மென்னவென்று கேட்கும்போது அதை மறைத்துவைக்க எனக்கு விருப்பமில்லை. நீங்கள் இப்பிரதேசத்துக்குப் புதிதோ என்னவோ தெரியவில்லை. அதோ காணப்படுகிற கட்டடம் பைத்தியக்காரர்களுக்காக ஏற்பட்ட ஆஸ்பத்திரியாகும்.

வாலி:—அம்மணி! என்னை மன்னிக்கவேண்டும். நீ பேசியதற்குமேல் பேசமுடியாமல் துக்கப்படுகிறாயே. உன் குமாரியும் கண்ணீர் வடிக்கின்றாள். ஐயோ பாவம்! நான் உங்களுக்கு ஆறுதல் உண்டாக்குவதற்குப் பதிலாகத் துக்கம் அதிகரிக்கும்படியே செய்தேன். அம்மா! நீ சொல்லப்போவது தெரிந்தது. அந்தப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் உன் பந்துக்கள் யாராவது இருக்கிறார்கள் போலும்!

அம்:—இருக்கிறார்கள். இருக்கிறார்கள். என்னுடைய இரு குமாரிகள் அதாவது இதோ இந்தப் பெண்ணின் அன்புள்ள சகோதரிகள் அந்த ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள்.

வாலி:—போதுமம்மா! அந்தத் துக்க சமாசாரத்தைப்பற்றி அதிகமாக ஒன்றும் சொல்லவேண்டாம். நான் உங்களுக்கு ஏதேனும் உதவி செய்யக்கூடுமாயின் நான்

மிகவும் சந்தோஷப்படுவேன் என்று மீண்டும் தெரிவித்துக் கொள்வதற்காக என்னை மன்னியுங்கள். நாம் இவ்வாறு நமது சொந்தநாட்டில் சந்தித்திருந்தால் என் உதவி உங்களுக்கு அவசியமா என்று கேட்டிருக்க மாட்டேன். ஆனால் அன்னியநாடாக இருப்பதால் தான் என் உதவி அவசியமோ என்று கேட்கிறேன். என்னாலியன்றதைச் செய்யக் காத்திருக்கிறேன்.

அம்:—ஐயா! மற்றொருமுறை உமக்கு நான் வந்தனம் செலுத்துகிறேன். உலகில் எந்த மனிதராலும் எங்களுடைய துயரத்தைத் தீர்க்கமுடியாது.

உடனே அந்த இளைஞன் அவர்களிருவருக்கும் வந்தனம் செலுத்திவிட்டுத் தன் வண்டியில் ஏறிக்கொண்டான். வண்டியும் புறப்பட்டு பரிதிபுரம் நோக்கிச்சென்றது. இச்சம்பவம் நிகழ்ந்தபின்னர் மரகதவல்லி தன் குமாரியிடம், "வா, நாங்கள் போவோம். அந்த இளைஞன் நமது விஷயத்தில் இவ்வளவு அனுதாபம் காட்டியது அவனுடைய நற்குணத்தைக் காட்டுகிறதல்லவா?" என்று கேட்டாள். குமாரியும் 'ஆம்' என்று கூறினாள். இருவரும் தேற்றிக்கொண்டு நடந்து சென்று ஆஸ்பத்திரி இருந்த இடத்தின் முதல் வாசற்படியை அடைந்தனர். உடனே அங்கிருந்த ஒரு வயோதிக சேவகன் கதவைத்திறந்தான். அவர்கள் தினசரி அங்கு வருவதால் அவர்கள் இன்னாரென்று அறிந்திருந்த அவன் அவர்களிடம், "இன்று உங்களிடம் ஒரு சந்தோஷச்செய்தி கூறப்போகிறேன். அதாவது நீங்கள் இன்று இங்குவந்தால் உங்களை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கும்படி டாக்டர் உத்தரவு கொடுத்திருக்கிறார்" என்று கூறினான்.

மகள்:—தாயே! நான் வழியில் சொன்னது சரியாகப்போயிற்றல்லவா? இன்று நாம் என் சகோதரிகளைக் காண்

போம் என்னும் ஒரு நிச்சயம் எனக்கு அப்போதே உண்டாயிற்று.

தாய்:—மகளே! நாம் ஆஸ்பத்திரியில் நுழைந்துவிட்டோம். இதோ அவர்களிருவரையும் பார்க்கப்போகிறோம். நீ அவர்கள் எதிரில் துக்கத்துடன் அழ ஆரம்பித்து விடாதே. நாம் இவ்வாறு துக்கத்தை வெளிப்படுத்துவதால் ஒருவாறு சொஸ்தமடைந்திருக்கும் அவர்களுக்கு என்ன ஆபத்து ஏற்படுமோ என்பது எங்களுக்கு என்ன தெரியும்?

மகள்:—அம்மா! என்னாலியன்றவரை துக்கத்தை அடக்கிக் கொள்ளவே முயல்வேன். ஆயினும் அதை அடக்குவது மிகக் கஷ்டமாகவே இருக்கும்.

இதற்குள் அவர்களிருவரும் அந்தக் கட்டடத்திலிருந்த விசிட்டர்கள் தங்கும் அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கே டாக்டர் திம்மனும் அவர்களைச் சந்தித்தார். அவர் வயதானவராகக் காணப்பட்டாலும் மிக்க அனுபவமும் ஆற்றலும் வாய்ந்தவராயும், உறுதியான மனோபாவமுடையவராயும், அனுதாபமுடையவராயும் இருந்தார். அவர் அம்மாதர்களிருவருக்கும் வணக்கம் செலுத்திவிட்டு, "மாதர்களே! நீங்கள் யார் விஷயத்தில் மிக அக்கரைகொண்டிருக்கிறீர்களோ அவர்களை இப்போது பார்க்கலாம். என் சிகிச்சை முறையில் அவர்கள் சொஸ்தமடைந்து தன்னறிவு உள்ளவர்களாக இருக்கின்றனர். உங்களைச் சந்திப்பதால் அவர்களுடைய நிலைமையில் என்னமாறுதல் ஏற்படுமோ என்பதை இப்போது என்னால் அறிய முடியவில்லையென்றாலும், இவ்வளவு நாட்களுக்குப் பின்னரும் உங்களைக் காக்கவைக்க நான் விரும்பவில்லை," என்று கூறினார்.

அதற்கு மரகதவல்லி, "டாக்டரவர்களே! அவர்கள் நன்றாக சௌக்கியமடைந்து பழைய நிலைமையை அடைந்து விடுவார்களெனத் தாங்கள் நினைக்கிறீர்களா?" என்று மிக ஆவலுடன் கேட்டாள். அப்போது அவர், "அம்மா! என்னாலாகாத ஒரு காரியத்தை நான் செய்துமுடித்துவிடுவேன் என்று நம்பிக்கை கொடுப்பதானது என் கடமையினின்றும் தவறியதாகும்," என்று கூறிக்கொண்டே மீனம்பாளுக்குத் தெரியாதபடி தாயினிடம் மட்டும் சில விஷயங்களைக் கூறுவதற்காக டாக்டர், தாயைமட்டும் ஒருபுறமாக அழைத்து, "உனது குமாரிகள்" என்றுசொல்ல ஆரம்பித்த போது இதை அறிந்துகொண்ட மீனம்பாள், "டாக்டரே! எனக்குத் தெரியாத இரகசியம் ஒன்றும் இருக்கக்கூடாது. இந்த சங்கதி தெரியாமலிருப்பதால் என் மனம் அதிக பாதைப்படும். டாக்டரவர்களே! உங்கள் முகம் பார்க்கும் போதே நீங்கள் ஏதோ அபாயத்தையே வெளியிடப்போவதாகத் தெரிகிறது" என்றுமன்றாடினாள். தாயாரும், "டாக்டரவர்களே! தாங்கள் சொல்லப்போவது எதையும் என் குமாரியின் எதிரிலேயே சொல்லலாம்" என்று கூறினாள்.

அப்போது டாக்டர், "அப்படியானால் சொல்லுகிறேன் கேளுங்கள். நான் ஆராய்ச்சி செய்து பார்த்தவரையில் அந்த இருமங்கையரின் மனமும் ஏதோ விபரீதமான அதிர்ச்சியைப் பெற்றிருக்கிறது. அந்த அதிர்ச்சியைப் போக்க யாராலும் எப்போதும் முடியாது என்பதே என் அபிப்பிராயம்" என்றார். இதைக்கேட்ட அம்மாதர்களிருவரும் சொற்ப நேரம் ஒன்றும் பேசாமல் இருந்தார்களென்றாலும் அதிக துக்கத்துடன் தங்கள் முகத்தை இருகரங்களாலும் மூடிக்கொண்டு கண்ணீர்விட்டனர். அவர்கள் அவ்வாறு தாங்க முடியாமல் துக்கப்படுவதைக் கண்ட டாக்டர் உடனே

அவர்களிடம், "ஓ, மாதர்களே! உங்களுடைய துக்கத்தை அடக்கிக் கொள்ளுங்கள். நான் எனது அனுபவத்தைக் கொண்டு இவ்வாறு கூறினேனே யொழிய இதுவே நிச்சய மென்பதல்ல. எல்லாம்வல்ல இறைவனருளால், உங்கள் அதிர்ஷ்டவசமாக அவர்கள் அந்த அதிர்ச்சியினின்றும் கூட சுகப்படலாம். மேலும் இப்போது நீங்கள் அவர்களைப் பார்ப்பதால் என்ன ஏற்படுமென்றும் என்னால் சொல்லமுடிய வில்லை. உங்கள் சந்திப்பானது நல்லதாகவும் முடியலாம் அல்லது கெட்டதாகவும் முடியலாம். தாயாரும் சகோதரி யும் வந்திருக்கிறீர்கள் என்று அறிந்து சந்தோஷப்பட்டால் நலமே. அல்லது உங்களைக் காண்பதால் அச்சத்தையோ பீதியையோ அடைவார்களானால் அது தீமையையே உண் டாக்கும். ஆகலின் நீங்களே எல்லாவற்றையும் யோசித்துக் கொண்டு இப்போது சந்திப்பது அவசியமா என்பதை முடிவு செய்யுங்கள்," என்று விவரமாகக் கூறினார்.

டாக்டர் கூறிய யோசனைகளைக் கேட்ட தாயாரும் மக ளும், தாங்கள் சிறிதும் துக்கப்படாதவர்களைப்போல் சந் திப்பதாயும், அவர்களுக்கு எத்தகைய அச்சமோ பீதியோ ஏற்படாதவாறு நடந்துகொள்வதாகவும் தெரிவித்ததன்மேல் அவரும் அவர்களை உள்ளே அழைத்துச் செல்வதாகச் சொல்லி, பைத்தியக்காரர்கள் இருக்கும் பல அறைகளுள்ள தாழ்வாரத்தின் வழியே அழைத்துச் சென்று இரங்கம்மா ளும் ஜானகியும் இருக்கும் அறையினிடம் சென்று, தன் னுடன் வந்த இரு மாதர்களுக்கும்தான் கூறியுள்ள எச் சரிக்கையை ஞாபகப் படுத்திவிட்டு அவ்வறைக் கதவைத் தட்டினார். உடனே அவ்வறையிலிருந்த வேலைக்காரி கத வைத் திறந்தாள். டாக்டர் உள்ளே நுழைந்தார். அவர் பின்னாலேயே மரகதவல்லியும், மீனம்பாளும் நுழைந்தா

கள். இச்சமயத்தில், தன் இருகுமாரிகளின் இவ்வளவு கஷ்டங்களுக்கெல்லாம் தானே காரணமாய் இருந்த அந்தத் தாயாரின் மனதில் எத்தகைய எண்ணங்கள் தோன்றியிருக்குமென்பதை நேயர்களே யூகித்தறிந்து கொள்ளவேண்டுமேயொழிய அதை வர்ணிக்க வாக்கியங்கள் போதாது. இவ்வாறே இத்தகைய நிலையில் தன் சகோதரிகளைக் கண்ட மீனும்பாளின் மனமும் என்னபாடு பட்டிருக்குமென்பதையும் நேயர்களே யூகிக்கவேண்டும். தாயும் மகளும், பரிதிபுரத்தில் கொலைசெய்யப்பட்ட அம்புஜத்தின் பிரேதம் புதைக்கப்பட்ட இடத்திற்குச் சென்று மனமார அழுதுவிட்டு வந்திருந்ததால், உயிருடன் ஆனல் மனேவிகாரத்துடன் ஆஸ்பத்திரியிலிருந்த இரங்கம்மாளையும், ஜானகியையும் பார்த்தபோது அவ்வளவு துக்கம் ஏற்படவில்லையென்றே கூறலாம்.

அவர்கள் யாரைப்பார்க்க விரும்பினர்களோ அவ்விருவரும் அந்த அறையின் ஜன்னலருகில் உட்கார்ந்துகொண்டு வெளிப்புறத்தில் எதையோ, உற்று நோக்கிக்கொண்டிருந்தார்கள். அவ்வறையின் கதவு திறக்கப்பட்டதை அவர்கள் அறியவில்லையோ அல்லது அறிந்துதான் கவனிக்கவில்லையோ தெரியவில்லை. அறைக்கதவு திறக்கப்பட்டதை அறியாதவர்கள்போலவே இருந்தார்கள். மரகதவல்லியையும் மீனும்பாளையும் கதவினருகில் நிற்கும்படி சொல்லிவிட்டு உடனே இரங்கம்மாளையும் ஜானகியையும் நோக்கினர்.

பின்னர் டாக்டர் மிக்க அன்பான முறையில், "இளமங்கையரே! நீங்கள் எதை இவ்வாறு மிக்க கவனத்துடன் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று பரிவுடன் கேட்டார். அதற்கு இரங்கம்மாள், மெதுவாகத் தனது முகத்தை டாக்டரின் பக்கமாகத் திருப்பிக்கொண்டே, "ஆகாயத்தில் தேவமாதர்கள் பறப்பதைக்கண்டேன். அவர்

கள் அதிக அழகுடையவர்களாக இருப்பதுடன், வெள்ளி யால் செய்யப்பட்டதுபோன்ற வெண்மையான இறக்கை களை யுடையவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களுடைய உடை அவர்களது வால்களுக்குப் பின்னால் நீளமாக இருக் கின்றன'' என்றாள். அதேசமயத்தில் ஜானகியும் இரங்கம் மாளைப்போலவே தனது முகத்தை மெதுவாகத் திருப்பிக் கொண்டே, "நானும் அவர்களைப் பார்த்தேன். ஆ! என்ன அழகு?'' என்றாள்.

அவர்களிருவரும் தங்கள் முகத்தை டாக்டரின் பக்க மாகத் திருப்பியபோது கதவினருகில் நின்றிருந்த மாகதவல் லியும் மீனும்பாளும் அவர்கள் முகத்தைக் கண்டார்கள். அவர்கள் பேசியபோது அவர்களுடைய குரலையும் கேட்டார் கள். முகம் அதிகம் வெளுத்திருந்தது. குரலோ மிக்க ஆழத்திலிருந்து பேசுவதுபோல் காணப்பட்டது. இதைக் கண்ட தாயும் மகளும் அடக்கமுடியாத துக்கத்தை யடைந் தார்கள். ஆயினும் அதை வெளிவிடாமல் அடக்கிக்கொண் டனர். பிறகு டாக்டர் அவர்களைச் சமீபத்தில் வரும்படி கையால் சமிக்ஞை செய்ததால் அவர்களும் மெதுவாக ஜன்னலருகில் சென்றார்கள். அப்போது டாக்டர் இரங்கம் மாள், ஜானகியிடம், "இதோ உங்களைக்காண நண்பர்கள் வந்திருக்கின்றனர். பாருங்கள்'' என்றார். அவர் அவ்வாறு கூறியதைக் கேட்ட அச்சகோதரிகளிருவரும் டாக்டரைப் பார்ப்பதைவிட்டு அவர் அருகில் நின்ற இருமாதர்களையும் நோக்கினர். உடனே இருசகோதரிகளுக்கும் ஓரே மின் சாரக்கம்பி தாக்கியதுபோல் ஒருவித அதிர்ச்சி ஏககாலத்தில் உண்டாயிற்று. இதனால் அவர்களுக்கு ஏதேனும் ஆபத்து உண்டாகுமோ என்று தாயும் மகளும் பயந்தார்கள். ஆனால் அவர்களிருவரும் ஓரேசமயத்தில் ஓரேவிதமான உணர்ச்சி

யடைந்தவர்கள்போல் தங்கள் ஆசனத்தினின்றும் விரைவில் எழுந்து, "சகோதரி மீனும்பாள்" என்று கூறிக்கொண்டே மீனத்தின்மீது பாய்ந்தார்கள்.

சகோதரிகளிருவரும் மீனும்பாளின் தோள்மீது சாய்ந்து மிக்க அன்பான முறையில் தங்கள் நேசத்தைத் தெரிவித்துக் கொண்டதுடன் அவளைக் கட்டியணைத்தார்கள், முத்தமிட்டார்கள். ஒருத்தி செய்த மாதிரியெல்லாம் மற்றொருத்தியும் செய்தாள். இருவரும் கண்ணீர் வடித்தனர். பிறகு இரங்கம்மாள் மட்டும் தனியே மீனும்பாளைக் கட்டித் தழுவிக் கொண்டாள். அவள் விட்டபிறகு ஜானகியும் அவ்வாறே சிறிதுநேரம்வரை தழுவிக்கொண்டாள். அப்போது மீனும்பாளும் அன்பின் மிகுதியால் அவர்களிருவரையும் கட்டித் தழுவி முத்தமிட்டு, "எனதன்புள்ள சகோதரிகளே" என்று அழைத்தாள். இரங்கம்மாள், "மீனு! வா, எனது சமீபத்தில் வந்து உட்காரு. உன்னைப் பார்த்து அதிக நாட்களாய் விட்டன" என்றாள். ஜானகியும் இதேமாதிரி கூறினாள். அச்சமயத்தில் மீனும்பாள் கண்ணீர் மிகுதியால், கண்தெரியாதபடியும், துக்கத்தினால் மேல்மூச்சுவிடவே பேசமுடியாதபடி இருந்தும் ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "எனதன்புள்ள சகோதரிகளே! உங்களைக்காண நமது தாயாரும் வந்திருக்கிறாள். இதோ நிற்கிறாளே" என்று கூறினாள். அப்போது மாகதவல்லியும், "ஆம்; என்னுடைய குமாரிகளே! நான் உங்கள் தாயார், மனம் உடைந்துபோன உங்கள் தாய்" என்று கூறிக்கொண்டே அவர்களைக் கட்டித் தழுவும் பொருட்டு அவர்கள் பக்கமாகச் சென்றாள்.

உடனே இரங்கம்மாள் அதிக ஆத்திரமும் பீதியும் அடைந்தவள்போல் தன் தேகம் முழுதும் நடுநடுங்க மிகக் கோபத்துடன், "என்ன? நீ எங்கள் தாயாரா? இல்லவே

இல்லை. நீ ஒரு பேயல்லவா? மந்திரிக்காரி. கெட்ட சுபாவங்களையுடைய அயோக்கியள். நான் உன்னை நன்கு அறிவேன். நீ எங்கள் தாய் அல்ல. வேண்டாம், வேண்டாம்" என்று கதறினாள். ஜானகியும் உடனே அதைவிட அதிகமாக ஆத்திரமும் பரபரப்புமடைந்து, "இல்லவே இல்லை. நீ எங்கள் தாய் அல்ல. நீ ஒரு பேயே" என்று கத்தினாள். பிறகு அச்சகோதரிகளிருவரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு ஒருத்தியின் பக்கத்தில் மற்றொருத்தியாக நின்றுகொண்டார்கள். இதனால் அவர்கள் பரஸ்பரம் ஒருவரையொருவர் எதிரில் நிற்கும் தங்கள் தாயினின்றும் பாதுகாத்துக்கொள்ள முயற்சிப்பதுபோல காணப்பட்டது. இதையெல்லாம் கண்ட மாகதவல்லி துக்கம் தாங்கமுடியாமல் தன் முகத்தின்மீது அறைந்துகொண்டு பின்னாலிருந்த சுவரின் மீது விழுந்து ஓவென்று அழுதாள் மீனம்பாளோ ஒன்றும் தோன்றாமல் திகைத்தவளாய்ச் சற்றுதூரத்தில் நின்றாள்.

அப்போது இந்த கோர சம்பவங்களையெல்லாம் கண்ட டாக்டர் திம்மன் அச்சகோதரிகளிருவரையும் நோக்கி, "என தன்புள்ள பெண்களே! நீங்கள் உங்களுடைய சகோதரியை மட்டும் தெரிந்துகொண்டுவிட்டீர்கள். மற்றொரு மாது உங்கள் தாயார்தான் என்று நான் நிச்சயமாகக் கூறுவதை நீங்கள் நம்பமாட்டீர்களா? என்று மெதுவாகவும் பட்சத்துடனும் கூறிக்கொண்டே அவர்களுடைய முகத்தில் என்ன மாறுதல் ஏற்படுகிறதென்று கவனித்துவந்தார்.

அப்போதும் இரங்கம்மாள் முன்னினும் அதிக கோபத்துடனும் கண்களில் தீப்பொரி பறக்கவும், "இல்லை, இல்லை. அவள் எங்கள் தாயால்ல. எங்களை இவ்வளவுதூரம் கெடுத்த கிழப்பேய் அவள்தான்" என்றாள். ஜானகியும் அதே வாக்கியங்களைத் திருப்பிக்கூறினாள்.

இதைக்கேட்ட டாக்டர் சிறிதுநேரம் யோசித்து மாகத வல்லி அங்கிருந்து வெளியேறிவிடுவதே நலமெனக் கருதி அவளை அப்பாற் செல்லும்படி சமிக்ஞைசெய்தார். ஆனால் அம்மாது அதைக் கவனியாமல் அதிக துக்கத்துடன், தான் செய்வது இன்னதென்றும் தோன்றாமல், "ஓ, கடவுளே. என்மீது கிருபைசெய். என்னால் பல பாதகங்களுக்குமுள் ளான என் குமாரிகளே! என்னை மன்னித்துவிடுங்கள். முன்னரே நான் மிக்க மனக்கஷ்டம் அடைந்திருக்கிறேன்'' என்று கூறிக்கொண்டே அப்பெண்களின்முன் முழங்காலிட்டுப் பணிந்து நின்றாள். அப்போது அவள் தன் கைகளிரண்டையும் பெண்களின் பக்கமாக நீட்டினாள். பார்வையோ மிக்க கொடூரமாயிருந்தது. அவள் அவ்வாறு செய்தபோது சகோதரிகளின் நிலைமையில் சிறிது மாறுதல் ஏற்பட்டது. அவர்களுடைய பீதியும் ஆத்திரமும் சிறிது சிறிதாக மறைந்துவந்தது. கோபத்தணலுடன் கூடியிருந்த கண்பார்வை சிறிது மங்கலாயிற்று. இதனாலெல்லாம் அவர்களுடைய மனம் அமைதியை அடைந்துவருகிறதெனத் தென்பட்டது. மாகதவல்லி செய்த ஆர்ப்பாட்டத்தைக்கண்ட டாக்டர், அவளை அங்கிருந்து பலாத்காரமாக அப்புறப்படுத்த முயன்றாரென்றாலும், பின்னால் பைத்தியக்காரிகளிடையே ஏற்பட்டுவந்த மாறுதலைக் கண்டு சிறிது நிதானித்து இன்னும் என்னவிசேஷம் ஏற்படுகிறதென்பதைக் கவனித்துவந்தார்.

மீனும்பாளும் நல்ல நிலைமை ஏற்படுமென ஆவலுடன் எதிர்பார்த்தாள். அங்கே இருந்த வேலைக்காரியும் அலட்சியமாய் இருந்துவிடாமல் அங்கு நடக்கும் எல்லாவற்றையும் கவனித்துவந்தாள். மாகதவல்லி முன்போலவே முழங்காலிட்டுப் பணிந்திருந்தாள். அப்போது பைத்தியக்காரிகளிருவரும் ஒருத்தியின் கையை மற்றொருத்தி பிடித்துக்கொண்ட

வண்ணம் தங்கள் தாயின் முகத்தை மௌனமாக உற்று நோக்கினர். இருவருடைய பார்வையும் சிந்தனையும் செயலும் ஒன்றாகவே காணப்பட்டது. இருவரும் ஒரேமனத்தையுடையவர்கள்போலக் காணப்பட்டனர். சிறிதுநேரத்துக்குப் பின்னர், இரங்கம்மாள் தன் கையைத் தன் சகோதரியின் பிடியினின்றும் நீக்கிக்கொண்டு அதனால் தன் நெற்றியைப் பிடித்துக்கொண்டு தன் மனத்தில் குழப்பமுண்டாக்கும் விஷயங்களைப்பற்றியெல்லாம் சிந்திப்பவள்போல் பாவனை செய்தாள். அதேசமயத்தில் ஜானகியும் அவ்வாறே நெற்றியில் கையை வைத்துக்கொண்டு தன் மூத்த சகோதரியைப் போலவே சிந்தித்தாள்.

அப்போது டாக்டர் இதுதான் நெருக்கடியான சமயம் என்பதை அறிவிக்கும் உத்தேசத்துடன் மீனும்பாளையும், வேலைக்காரியையும் கூர்மையுடன் பார்த்துக் கண்ணால் சமிக்ஞை செய்தார். உண்மையிலேயே அச்சமயம் ஒரு பெரிய நெருக்கடியானதாகவே இருந்தது. அடுத்தசமயம் என்ன நேரப்போகிறதென்பதை அறிந்து சொல்ல யாராலும் முடியவில்லை. மறுநிமிஷமே இருசகோதரிகளும் ஏககாலத்தில் பயங்கரமான குரலுடன், "ஓ, கடவுளே! அவள் உண்மையில் நமது தாயார்தான்" என்று கத்தினர். ஆனால் உடனே இரங்கம்மாள் தன் தேகம் முழுதும் வெளுக்கத் திடீரென்று அங்கிருந்த கம்பளத்தின்மீது தப்பென்று விழுந்தாள். அவளது உதடுகளினின்றும் இரத்தம் பீறிட்டுவந்தது. இதைக் கண்ட மீனும்பாள் அச்சமும் பீதியுமடைந்து தன் மூத்த சகோதரியின் பக்கமாக ஓடிக்கொண்டே, "ஐயோ கடவுளே! அவள் சாகப்போகிறாள்" என்று கூவினாள். அப்போது ஜானகி, "இல்லை, இல்லை. சமீபத்தில் போகாதே" என்று கூறிக்கொண்டே அவளைப் பலாத்காரமாக அப்பால்

தள்ளிவிட்டுக் கம்பளத்தின்மீது துக்கத்துடன் புரண்டுகொண்டிருந்த இரங்கம்மாளின்மீது தானும் விழுந்தாள்.

இரங்கம்மாளின் இரத்தாசயமொன்று உடைந்துவிட்டதால் ஆபத்து ஏற்பட்டுவிட்டதென்று மரகதவல்லியும், மீனும்பாளும் உணர்ந்து அளவிலாதுக்கத்தை யடைந்தார்கள். டாக்டரும் வேலைக்காரியும் சேர்ந்து ஜானகியை அப்புறப்படுத்தினார்கள். ஆனால் ஜானகியின் உதட்டினின்றும் கூட இரத்தம் பீறிட்டு வந்துகொண்டிருந்தது. எனவே இருவருடைய இரத்தாசயமும் உடைபட்டுவிட்டதால் அவர்களிருவரும் பிழைப்பது அரிதெனத் தெரிந்துகொண்டு அவர்களைத் தனித்தனியே இரண்டு படுக்கைகளின்மீது படுக்க வைத்தார்கள். டாக்டர், தன்னால் எவ்வளவுதூரம் அவர்களுக்கு சிகிச்சை செய்யமுடியுமோ அவ்வளவையும் செய்தார். ஆயினும் பயன்படவில்லை. இரங்கம்மாளும் ஜானகியும் இறக்கும் தருணத்தில் இருந்தனர். மரகதவல்லியும், மீனும்பாளும் அடக்கமுடியாத துக்கத்தை யடைந்தனர். டாக்டர் முகத்தோற்றத்திலிருந்து அவர்கள் பிழைப்பார்களென்னும் நம்பிக்கை தோன்றவில்லை. ஆகவே தாயும் மகளும் கண்ணீரும் கம்பலையுமாய் முதலில் ஒருத்தியையும், பிறகு மற்றொருத்தியையுமாக இருவருடைய முகத்தையும் உற்றுப்பார்த்துத் துக்கத்தைத் தெரிவித்தனர். இரங்கம்மாளோ அல்லது ஜானகியோ பின்னர் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

ஆனால் இரத்தாசயம் உடைந்த இருபது நிமிஷங்களுக்குப் பின்னர் இருவரும் தன் தன் படுக்கையிலேயே எதையோ ஒன்றைப் பிடிக்க விரும்புவதுபோல் அசைந்தார்கள். இவ்வாறு அவர்கள் ஒருவர்பக்கம் மற்றொருவராகத் திரும்பினர். பிறகு தீவிர பிரயத்தனத்தால் அவர்கள் ஒரு

வர்மீது மற்றொருவர் கையைப் போட்டு அணைத்துக் கொண்டார்கள். இருவரும் கண்களை மூடிக்கொண்டனர். பின்னர் எக்காலத்தும் எழுந்திருக்கமுடியாத ஒரே நிரந்தர மான தூக்கத்தில் இருவரும் மூழ்கிவிட்டனர்.

இச்சம்பவம் நடந்த இரண்டாவதுநாள் பகல் மரகத வல்லியும், மீனம்பாளும் அதே ஆஸ்பத்திரியில், இரங்கம்மா ளும் ஜானகியும் இறந்துபோன அறைக்குள் நுழைந்தார்கள். இரண்டு பிரேதங்களையும் ஒரேபடுக்கையில் கிடத்தியிருந்தனர். இருசகோதரிகளின் முகமும் சலவைக்கல்லால் செய்யப் பட்ட சித்திரம்போல் வெளுப்பாக இருந்தன. பிரேதப் போர்வை அவற்றின்மீது போர்த்தியிருந்தனர். உலக சம்ப வங்களோ, அல்லது இதுவரை அவர்களை வாட்டிவந்த மனக் குழப்பங்களோ அல்லது மரகதவல்லி, மீனம்பாள் ஆகியவர் களின் கவலையோ இறந்துபோன அவர்களுடைய சம்பந் தத்தை அறுத்துக்கொண்டுவிட்டன. அப்பிரேதங்கள் கிடந்த படுக்கையின் அருகில் மரகதவல்லியும், ஜானகியும் மண்டியிட் டுப் பிரார்த்தனை செலுத்தினர். அறைமுழுதும் நிசப்தமாகக் காணப்பட்டது. துக்கத்துடன் இருந்தவர்களும் பெரு மூச்சுவிட்டுக்கொண்டே பக்தியுடன் பிரார்த்தனை செலுத்தி னார்களே தவிர ஓவென்று வாய்விட்டு அலறி அழவில்லை. மீனம்பாள் வருத்தப்படுவதற்கு எத்தகைய காரணமுமில்லை. ஆனால் மரகதவல்லி மட்டும் **தன்** இருதயமே வெடித்துப் போகும்படி அவ்வளவு அதிகமாக மனவருத்தத்தையும், தான் செய்த குற்றத்துக்காக துக்கத்தையும் அடைந்தாள். அப்போதுதான் அவள் இவ்வுலகில் எத்தகைய செயலுக்கும் அதற்கேற்ற தண்டனையோ சன்மானமோ நிச்சயமாக உண்டு என்பதை உணர்ந்தாள். தன்னைத்தானே எவ்வளவுதூரம் குறைகூறிக்கொள்ளலாமோ அவ்வளவுதூரம் வருத்தப்பட் டாள்.

நேயர்காள்! இதில் எள்ளத்தனையேனும் சந்தேகம் உண்டா? 'முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்' என்பது போல ஒவ்வொருவரும்தான் செய்யும் தீய, அல்லது நல்ல காரியங்களுக்கேற்ப தண்டனையையோ சன்மானத்தையோ விரைவில் அடைந்தேதீர்வர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனல் பலர் இதை அறிந்திருந்தும் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்பதுபோல, தங்கள் செய்கைக்கேற்ற பலன் கிடைக்குமென்பதையும் மறந்து சகல விதமான தீய காரியங்களிலும் புகுந்துவிடுகின்றனர். சாதாரண பாமரமக்கள் இவ்வாறு தவறான காரியங்களில் இறங்கிவிடுவதில் ஆச்சர்யமொன்றுமில்லை. அதிகம் படித்தவர்களென்றும், உயர் ஜாதியினரென்றும், மற்றும் பல விதமாகவும் பெருமை பேசிக்கொள்ளும் பலர், தங்கள் காரியத்துக்கேற்ற பலன் உண்டு என்பதை மறந்து, இரகசியமாகப் பல கெட்டகாரியங்களில் இறங்கிவிடுவதுதான் ஆச்சரியத்தை அளிக்கக்கூடியதாயிருக்கிறது. அப்படி தவறான வழியில் நடந்துகொள்ளும் அவர்களும், பூனை கண்ணைமூடிக் கொண்டால் உலகமே இருண்டுவிட்டதாக நினைப்பதேபோல, உலகத்தை ஏமாற்ற முயலுகின்றனர். உலக கர்த்தாவான, அங்கிங்கெனாதபடி எங்கும் நிரம்பியுள்ள சர்வசக்தியையும் ஏமாற்றுவதாக நினைப்பதுதான் ஆச்சர்யத்திலும் ஆச்சர்யமாகும். ஆதலின் மக்கள் அனைவரும் தாங்கள் செய்யும் காரியங்களுக்கேற்ப பலன் நிச்சயமாக அனுபவிக்க நேரிடுமென்பதை உணர்ந்து சரியான வழியில் நடந்து இறைவனுக்குத் திருப்தியை அளிப்பார்களாக.

இறுதியில் மரகதவல்லியும், மீனும்பாளும் அவ்விரு பிரேதங்களின்மீது சாய்ந்து உதட்டுடன் உதட்டைச்சேர்த்து விட்டு அங்கிருந்து புறப்பட்டனர். கைகால்கள் ஒய்ந்து

போனவர்களைப்போல் மிக்க தளர்வுடன் மெதுவாக நடந்த னர். பின்னர் அவர்களிருவரும் சப்தம் செய்யாமல் ஆஸ் பத்திரியின் வெளிப்புறச் சுவற்றைவிட்டு வெளியேவந்தபின் துக்கம் தாங்கமுடியாமல் ஒவென்று வாய்விட்டு அலறி அழு தார்கள். பின்னர் சிறிதுதூரம் நடந்துசென்று அங்கிருந்த ஒரு வண்டியை வாடகைக்குப் பேசிக்கொண்டு பரிதிபுரத்தில் தாங்கள் இறங்கியிருந்த இடத்துக்குச் சென்றனர்.

மூன்று தினங்களுக்குப் பிறகு பைத்தியக்காரிகளான இருவருடைய பிரேதத்தையும் முன்பு அம்புஜத்தின் பிரே தம் புதைக்கப்பட்ட இடத்திலேயே புதைத்தனர். இதைக் கண்ட தாயும் மற்றொரு சகோதரியும் எல்லையில்லா துக் கத்தை யடைந்தனர்.

180 - வது அத்தியாயம்

இவ்வாறு மரணச்சடங்கு முடிந்த சில தினங்களுக்குப் பிறகு தாயும் மகளும் துக்க உடையை அணிந்து கொண்டு தங்கள் தேசம் செல்வதற்காகப் பரிதிபுரத்தி லிருந்து கப்பலில் புறப்பட்டனர். அக்கப்பல் சிறிதாகவே இருந்ததால் அதில் பிரயாணம் செய்த ஜனங்களும் பெருங் கூட்டமாக இல்லாமல் சொற்பமாகவே இருந்தனர். அப்பிர யாணிகளில் ஒரு ஆடவன் மட்டும் மரகதவல்லியையும் மீனம் பாளையும் ஆவலுடனும் பரிவுடனும் கண்டான். அவன், அவர்களிருவரும் முன்பு திம்மனுடைய ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வழியில் துக்கத்தோடு உட்கார்ந்திருந்தபோது சந் தித்தவனே. அம்மாதர்களிருவரும் மிக்க துக்கத்துடன் இருப்பதை அவன் கண்டுகொண்டான். ஆகவே அவர் களுக்கு ஏதோ துக்கசம்பவம் நேர்ந்திருக்க வேண்டுமென

முடிவுசெய்தான். ஆயினும் தானாக மேல்விழுந்து அவர்களுடன் பேசுவது கௌரவமல்லவென நினைத்துத் தன் மட்டும் வேறு விஷயங்களைக் கவனிப்பவன்போல் நடந்துகொண்டானென்றாலும் அவர்களுடைய நடவடிக்கைகளையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்தான்.

முன்பு அம்மாதர்களிருவரும் ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வழியில் இருந்தபோது அவ்விளைஞன், மீனம்பாளைக் கண்டதும் அவளுடைய துக்கத்துக்கிடையிலும் அவள் அழகைக்கண்டு மோகித்தான். அதுமுதல் அவளுடைய உருவம் அவனுடைய மனக்கண்ணை விட்டு அகலவேயில்லை. இப்போதும் அவள் எல்லையற்ற துக்கத்தை யடைந்திருந்தபோதிலும் அவளது அழகுமட்டும் சிறிதும் பின்னப்படவில்லை. அவளைப் பார்க்கப்பார்க்க அவனுக்கு அவளிடம் அன்பும் ஆதரவும் அதிகரித்து வரலாயிற்று. பின்னர் அவன், அம்மாதர்களுடைய வரலாறு முழுதும், அக்கப்பல் தலைவனுக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்று நினைத்து அவனை விசாரித்ததில் அவனும் அவர்களிருவரும் மாரகதவல்லியும் மீனம்பாளும் ஆவாரென்றும் இரங்கம்மாளும் ஜானகியும் ஆஸ்பத்திரியில் இறந்துவிட்டதாகவும், இவர்களுடைய குடும்பத்தைப்பற்றிப் பரிதிபுரத்தில் அதிகம் விஷயங்கள் வெளியாயிருக்கிறதென்றும் தெரிவித்தான்.

கப்பலிலிருந்த மரகதவல்லியும் மீனம்பாளும் தங்கள் ஆழ்ந்த துக்கத்திலேயே மூழ்கி யிருந்ததால் அவர்கள் சதா துக்க விஷயத்தைப்பற்றியே பேசிக் காலங்கழித்ததால் அதே கப்பலில் தங்களை முன்பு சந்தித்த வாலிபன் இருக்கிறான் என்பதையும், அவன் தங்களைக் கூர்ந்து கவனிக்கிறான் என்பதையும், ஆகாயம் இருண்டு புயல்காற்று அடிக்க ஆரம்பமாகிறதென்பதையும் அவர்கள் அறியவில்லை. கடலில்

அலைமிக்க கொந்தளிப்புடன் பொங்க ஆரம்பித்தது. கப்பல் பேய்பிடித்தவன் தலையைப்போல் அசைந்தாடலாயிற்று. பிரயாணிகளனைவரும் பீதியினால் கூச்சலிட ஆரம்பித்தார்கள். கப்பல் தலைவனும் சமீபத்தில் கப்பலுக்கு ஆபத்து வரும் என்பதை அனைவருக்கும் அறிவித்துவிட்டான். அப்போது தான் மாகதவல்லியும், மீனம்பாளும் தூக்கத்திலிருந்து விழித்தவர்கள்போல் தெளிவடைந்து அபாயத்துக்குக் காரணமென்னவென்று கவனிக்கும்பொருட்டு திகைப்புடன் நாற்புறமும் சுற்றிப்பார்த்தனர். உடனே ஒருவன் அவர்களிடம் ஓடிவந்து அவர்கள் உட்கார்ந்திருந்த ஆசனத்தையே கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும்படி யோசனை கூறினான். அவன் முன்பு தாங்கள் சந்தித்த இரத்தினபுரி இளைஞன் என்பதை அம்மாதர்களிருவரும் உணர்ந்தனர். அவனும் அப்பிரதேசத்துக்குப் புதியவனாகையால் என்ன ஆபத்து நேருமென்று உணர்ந்துகொள்ள அவனாலும் முடியவில்லை.

அக்கடல் வருஷத்தில் குறிப்பிட்ட காலத்தில் அவ்வாறுதான் கொந்தளிப்பது வழக்கம். அக்காலத்தில் அதில் பிரயாணம் செய்வது மிகக் கஷ்டம். ஆகவே கப்பல் தலைவன் எச்சரிக்கை செய்த சற்று நோத்துக்கெல்லாம் கடல் மிக்க கடுமையாகக் கொந்தளித்ததால் சிறு கப்பல் தலை கீழாகக் கவிழ்ந்தது. உடனே எல்லாப் பிரயாணிகளும் நடுக்கடலில் தத்தளிக்கின்றனர். ஒவ்வொருவரும் தத்தங்கள் உயிருக்காக மன்றாடுகின்றனர். கப்பல் தலைவனும் சேவகர்களும் மட்டும் கப்பலையே கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். ஆயினும் அவர்களும் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள விரும்பியதால் பிரயாணிகளுக்கு உதவி செய்ய அவர்களால் முடியவில்லை. சமீபத்திலிருந்த துறைமுக நகரத்தார் இத்துக்க சம்பவத்தைக் கண்டதும்

மிக அவசரமாக இரண்டு மூன்று படகுகளை அனுப்பினார்கள். ஆனால் இதற்கிடையில் ஆடவர்களும் மாதர்களுமாகப் பலர் கடலில் மூழ்கிவிட்டிருந்தனர். அவ்வாறு மூழ்கிவிட்ட மாதரில் மரகதவல்லியும் ஒருத்தியாவாள். மீனும்பாளை மட்டும் நீந்துவதில் மிகத் தேர்ச்சி பெற்றவனும், தைரியசாலியாயுமிருந்த ஒருவன் ஒரு கையால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். அவனும் அச்சத்தை விட்டுப் பொறுமையுடனும் நிதானமாகவும் சாமர்த்தியமாகவும் நீந்திச் செல்வதிலேயே தன் உயிரும், தான் விரும்பும் அப்பெண்மணியின் உயிரும் காப்பாற்றப்படும் என்பதை உணர்ந்தான். அதிர்ஷ்டவசமாக மீனும்பாள் மூர்ச்சையடைந்திருந்ததால் அவள் சவம்போல் தண்ணீர்மீது கிடக்கவே அவளைத் தன் இஷ்டப்படி இழுத்துக்கொண்டு நீந்த அவனுக்குச் சௌகரியமாயும் எளிதாயும் இருந்தது. அதிர்ஷ்டவசமாக அவனும் தப்பித்து எதிரில் வந்த ஒரு படகில் ஏறிக்கொண்டு அப்பெண்ணையும் தூக்கிப்போட்டான். கப்பல் விபத்திலிருந்து தப்பிய சிலரில் இவ்விருவரும் சேர்ந்தவர்கள். பிழைத்துத் தப்பியவர்களில் மரகதவல்லியும் இருக்கிறாளே என்று மிக ஆவலுடன் அவ்வாலிபன் பார்த்தான். ஆயினும் கடலில் மூழ்கிவிட்டவளை அவன் எவ்வாறு காணமுடியும்? ஆகவே அவள் இறந்துவிட்டிருக்க வேண்டுமென்று அவன் முடிவு செய்தான்.

அந்தப் படகு துறைமுக நகரத்தையடையுமுன் மீனும்பாள் மயக்கத்திலிருந்து தெளிந்தெழுந்தாள். அப்போது அவ்வாலிபன் அவளைத் தன் தொடைமீது படுக்கவைத்துக் கொண்டு அவள்மீது தன் கையைப் போட்டிருந்ததால் அவளுக்கு விழிப்பும் உணர்ச்சியும் ஏற்பட்டதும் உடனே அவள் அவன் தொடைமேலிருந்து திடீரென்று பிரமையுடன்

எழுந்து உட்கார்ந்துகொண்டு நாற்புறமும் சுற்றிப்பார்த்தாள். தான் இருந்த படகுக்கருகில் இன்னும் இரண்டொரு படகுகள் வருவதையும், எல்லாப் படகிலுமுள்ள ஜனங்கள் எப்போது கரை சேருவோமென மிக ஆவலுடன் இருந்ததையும் கண்டு என்ன நடந்திருக்கவேண்டுமென்பதை உணர்ந்து கொண்டுவிட்டாள். சுற்றிலும் பார்த்ததில் தன் தாயாரைக் காணேம். உடனே அவள் தன் அருகிலிருந்த வாலிபனின் முகத்தை உற்று நோக்கினுள். அவன் முகக்குறியிலிருந்து அவள் கடலில் மூழ்கியிருக்கவேண்டுமென்பதை அறிந்து கொண்டாள். உடனே அவளுக்குத் துக்கம் அதிகரித்து விட்டது. இன்னதுதான் செய்வதென்று தோன்ருமல் வாய்விட்டு அலறி அழ ஆரம்பித்தாள். ஆயினும் அவள் எவ்வளவுதான் அழுது புரண்டாலும் அவ்வழுகை கடலின் அடியில் மூழ்கிப்போன அவளுடைய தாயாருக்குக் கேட்பதாக இல்லே. அவள் மீண்டும் மூர்ச்சையுற்று மயக்கமாக அவ்வாலிபனுடைய மடியின்மீதே விழுந்தாள்.

மீண்டும் அவள் மயக்கம் தெளிந்து எழுந்தபோது அவள் ஒரு நாகரிகமான அறையில் நல்ல படுக்கையின்மீது படுத்திருப்பதையும், தன்னேச் சுற்றிலும் வைத்தியர் இருப்பதையும் அறிந்தாள். திக்கற்ற அனுதை என்னும் பெயருடன் இவ்வுலகில் வாழ்வதைவிடக் கடலில் மூழ்கி இறந்துவிட்டிருப்பதே மேலெனக் கருதினுள். கடலில் மூழ்கிவிடாமல் அவளேக் காப்பாற்றிய மனிதனே அவளுக்கு இவ்வளவு சௌகரியங்களேயும் செய்து கொடுத்திருந்தான். ஆயினும் மீனும்பாள் தன் தாயாரை இழந்துவிட்டதற்காக மிகவும் துக்கப்பட்டதால் அத் துக்கத்தினின்றும் அவளேத் தேற்ற யாராலும் முடியாமற் போயிற்று.

இவ்வாறு மூன்று நான்கு தினங்கள் கழிந்த பின்னர் அவளுடைய துக்கம் சிறிது சிறிதாகக் குறையத் தொடங்

கிற்று. இதற்குக் காரணம் அவனன்றி ஓரணுவும் அசையாது என்னும் பழமொழிப்படி எல்லாம் வல்ல இறைவன் இஷ்டத்துக்குட்பட்டே நமது வாழ்க்கையை நடத்தவேண்டியிருக்கிறதென்னும் உண்மையை மீனும்பாள் அறிந்துகொண்டபடியால் கவலையை மறந்து இறைவன்விட்ட வழியாகட்டும் என்று நிம்மதியுடன் இருக்கலானாள். மேலும் அதிகமாகத் துக்கமடைந்து அதனால் தேக சுகத்தைக் கெடுத்துக்கொண்டால் இன்னும் பலநாள்வரை, முன்பின் தெரியாத ஒரு நண்பனின் உதவியிலேயே இருக்க நேரிடுமே என்றும் கருதி அதைத் தவிர்க்க விரும்பிக் கவலையை மறந்து வந்தாள். மேலும் அவள், கடலில் மூழ்கிப்போனவர்களின் பிரேதங்கள் சமுத்திரக்கரையை அடைந்திருக்குமாதலின் தன் தாயார் பிரேதத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று விரும்பியதாலும் தன் தேகத்தை ஆற்றிக்கொள்ள முதலில் பிரியப்பட்டாள். ஆகவே இச்சம்பவம் நிகழ்ந்த நான்காவது தினத்தன்று மீனும்பாள் தான் படுத்திருந்த அறையினின்றும் வெளிப்பட்டுத் தன்னை அந்த ஓட்டலில் கொண்டுவந்து வைத்தவனும், கடலில் மூழ்கிவிடாதபடி காப்பாற்றியவனுமான அவ்வாலிபனைக் காணச் சென்றாள். அவனைச் சந்தித்ததும் அவள் அவனுக்கு அதிகமாக வந்தனத்தைச் செலுத்திவிட்டுத் தான், தன்னுடைய மற்ற மூன்று சகோதரிகளைப்போன்ற மனோபாவமுடையவளல்லவென்றும், மற்றும் தன்னுடைய பல நிலைமைகளைப்பற்றியும் கூறிக்கொண்டாள். கடைசியில் அவ்வாலிபன் இரத்தினபுரியில் பணம் லேவாதேவி செய்துகொண்டிருந்த வேலப்பனிடம் குமாஸ்தாவாக இருந்த விசுவநாதனே என்பதையும் தெரிந்துகொண்டாள்.

விசுவநாதன் அப்பெண்மணி கூறியதையெல்லாம் கேட்டபின்னர், மாரகதவல்லியின் பிரேதத்தைத் தேட ஒரு

பெண்மணி போவது அழகல்லவென்றும், அவ்வேலையைத் தானே மேற்போட்டுக்கொள்வதாகவும், அவள் இன்னும் சொற்பகாலம் அந்த ஒட்டலிலேயே தங்கியிருக்கவேண்டு மென்றும் கேட்டுக்கொண்டான். அதற்கு அவளும் இணங்கினாள். மாகதவல்லியின் பிரேதமும் அகப்பட்டது. ஒருவாறு மாணச் சடங்குகளும் முடிந்தன. ஆனால் மீனும்பாளின் மனம்மட்டும் நிம்மதியடையவில்லை. எப்படி நிம்மதியாக இருக்கக்கூடும்? தன் மூன்று சகோதரிகளையும் கேவலமான முறையில் இழந்தாள். தாயாரையும் பரிதாப மான வகையில் இழக்கவேண்டியதாயிற்று. தானும் திக் கற்றவளாக நிற்கிறாள். தன்னுடைய ஆடை ஆபரணங் களும் பணமும் இருந்த பெட்டியும் தாயாருடன் தண்ணீரில் மூழ்கிவிட்டது. என்ன செய்வாள் பாவம்! மிக்க அவமான மாகவும் கவலையாகவும் இருந்தது. விசுவநாதன், தாங்கள் தங்கியிருந்த வீட்டுக்காரியின்மூலம் மீனத்துக்குப் பண உதவிசெய்ததால் அவள் மீண்டும் தனக்கு அவசியமான ஆடையாபரணங்களை தயாரித்துக் கொண்டதுடன், தன் தாயின் மாணச்சடங்குகளையும் முடித்தாள். தானும் சுக மாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தாள்.

எனினும் தனக்கு முன்பின் தெரியாத ஒரு வாலிப னுடைய பணத்தை இவ்வாறு அனுபவித்துக்கொண்டிருக்க அவள் பரிசுத்த மனம் ஒப்பவில்லை. சங்கோசமடைந்தாள். எவ்வளவுநாள் அவசியமோ அதற்குமேல் ஒரு நாழிகையும் அவ்வாலிபனின் உதவியில் இருப்பது நியாயமல்லவென்று கருதினாள். ஆகவே என்ன செய்வதென்று தானே தன்னந் தனியாய் இருந்து பலமுறை யோசித்ததில் உடனே இரத் தினபுரிக்குச் சென்று அங்கிருந்து கந்தபுரிக்குத் தன் பெரிய தாயார் வீட்டுக்குச் சென்றால் ஒன்றுவிட்ட சகோதரிக

ளாகிய கற்பகவல்லியும் கோமளவல்லியும் அன்புடன் வர வேற்று உபசரித்துவேண்டிய உதவிகளையெல்லாம் செய்வார்க ளென்று நினைத்தாள். ஆயினும் தனக்கு இவ்வளவு உதவிகளை யெல்லாம் செய்ததுடன் உயிரையே காப்பாற்றிய விசுவநாத னிடம் தெரிவிக்காமல் எப்படி அங்கிருந்துபுறப்பட்டுவிடமுடி யும்? எனவே அவள் ஒருநாள்நிதானமாக விசுவநாதனை, ஓட் டலின் மற்றொரு அறையில் கண்டு தன்னுடைய நிலைமையை யும் யோசனைகளையும் தெரிவித்துக்கொண்டாள். அவள் கூறிய யோசனையை மறுத்துக்கூற அவனால் முடியவில்லை. எனி னும் அவன் அவளது கரத்தைத் தன் கையால் பிடித்துக் கொண்டு பின்வருமாறு கூறினான்.

"மீனா! நாங்களிருவரும் இப்போது பிரியும் நிலைமையில் இருக்கிறோம். உன் மனம் பல துன்பங்களால் புண்பட் டிருக்கும் இவ்வேளையில் நான் என் மனதிலுள்ளதைப் பேசி னால் நீ என்னநினைப்பாயோ என்று அஞ்சுகின்றேன். நாம் இருவரும் வெறும் அறிமுகமானவர்கள் என்றுமட்டும் கூறி விடமுடியாது. இந்த சொற்பதினங்களில் நடந்த சம்பவங் களாலும் நம் இருவரிடையே ஏற்பட்ட சம்பந்தத்தாலும் நாம் இருவரும் கடவுள் செயலினாலேயே பரம அன்பர்க ளாக்கப்பட் டிருக்கிறோமென்பதை நீ உணரவேண்டும். அன்புமட்டு மல்ல. அதற்குமேலும் ஒருபடி அதிகமாகவே சொல்லும்படி என் மனம் தூண்டுகிறது. நீ இப்போது இரத்தினபுரிக்குச் சென்று உன் துக்கமெல்லாம் மறந்து நீ நிம்மதியை அடைந்த சொற்ப தினங்களுக்கெல்லாம் என் னையே நீ கணவனாக ஏற்றுக்கொள்வதால் உன் எதிர்கால வாழ்க்கை இன்பமயமானதாக இருக்குமென்று கருதுவதாக நீயே எனக்குக் கடிதம் எழுதப்போகிறாய் என்பது நிச்சயம். இப்போது உள்ள நிலைமையில் உனக்கு அப்படிப்பட்ட எண் ணம் தோன்றாதுதான். நான் இவ்வாறு பேசுவதுபற்றி நீ

தவருகக் கருதிவிடாமல் மன்னிக்கவேண்டும். நாம் இருவரும் சந்தித்த சந்தர்ப்பம் அப்படிப்பட்ட அருமையான, நம்மை அதிக பந்தத்தில் பிணைக்கக்கூடிய சமயமாகுமென்பதே என் அபிப்பிராயம்''

இவ்வாறு கூறியபின்னர் விசுவநாதன் சிறிதுநேரம் பேசாமலிருந்தான். அப்போது மீனும்பாள் வாய்திறந்து ஒன்றும் பேசவில்லையென்ருலும், அவள் தலையைச் சாய்த்த வண்ணம் துக்கமிகுதியால் கண்ணீர் வடித்தாளென்ருலும், அவன் மேற்கூறியவாறு பேசிமுடித்ததும் அவளுடைய கன்னங்களில் ஒரு புளகாங்கிதகுறி காணப்பட்டதுடன் அவள் தன் கரத்தை அவனுடைய கையிலிருந்து இழுத்துக் கொண்டுவிடாமல் அவன் கையிலேயே இருக்கவிட்டு, அவள் மெய் சிலிர்ப்புற்றதாலும் தான் கோரிய கோரிக்கையை அவள் மறுத்துவிடவில்லையென்பதை அவன் உணர்ந்தான்.

ஆகவே அவன் மீண்டும், ''நான் இரத்தினபுரியிலுள்ள ஒரு பெரிய கம்பெனியின் பரிதிபுரத்துக்கிளை ஸ்தாபனத்தின் மானேஜராக பரிதிபுரத்தில் வசித்துவருகிறேன். நான் அந்த கம்பெனி வேலையாகத்தான் இக்கடலில் பிரயாணம் செய்தேன். இங்கு இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் நேரிட்டன. நான் இப்போது இங்கிருந்து பரிதிபுரமே திரும்பிச்செல்வேன். நீயும் இங்கிருந்து சௌக்கியமாக இரத்தினபுரிக்குப் போய்ச் சேர்ந்ததாக நான் கேள்விப்பட்டால்தான் என் மனம் நிம்மதியடையும். இதோ என்னுடைய விலாசத்தையும் உனக்குத் தருகிறேன். உன்னிடமிருந்து ஒரு கடிதம் கிடைக்கும் வரையில் ஒவ்வொருநாளும் எனக்கு ஒவ்வொரு யுகமாகக்கழியும் என்று என் ஆவலைத்தெரிவித்துக்கொள்வதற்காக நீ என்மீது கெட்ட எண்ணம் கொள்ளலாகாது. இரத்தினபுரியிலுள்ள உன் பந்துக்கள் ஆதரவில் தங்கப்போவ

தாகச் சொல்கிறாய். எனக்கும், என் அரிய சகோதரி அங்கு இருக்கிறாள். சமீபத்தில்தான் அவள் சர்தார் சூரியநாயகம் பிரபுவுக்குக் கலியாணம் செய்துகொண்டாள். அவர்களும் இரத்தினபுரியில்தான் இருக்கின்றார்கள். இப்போது நீ இருக்கிற நிலைமையில் அதிக அன்புடன் உன்னை வரவேற்று உபசரிக்கக் கூடியவர்களையே நீ எதிர்பார்க்கிறாய். என் சகோதரி அமிர்தம்மாள் எனக்காகவாவது உன்னை வரவேற்று வேண்டிய உதவிகளையெல்லாம் செய்வாள். என் சகோதரிக்கும் அவளது கணவனுக்கும் ஒருகடிதம் எழுதித்தா நீ அனுமதிக்கவேண்டும். அக்கடிதம் உனக்கு மிக உதவியாக இருக்கும்'' என்று வினயமாகத் தெரிவித்துக்கொண்டான்.

விசுவநாதன் இவ்வாறு அன்புடனும் அனுதாபத்துடனும் பேசியதையெல்லாம் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த மீனும்பாள் சிறிது யோசனைக்குப்பின்னர், அவனுடைய அன்பை நன்கு உணர்ந்தவள்போல இனிய தொனியில், "விசுவநாதரே! தாங்கள் கூறியபடி நாம் இருவரும் சந்திக்க நேர்ந்த சந்தர்ப்பம் மிக்க பரிதாபமானதே. ஆகையால் தாங்கள் பேசியதிலும் கருதியதிலும் யாதொரு தவறுதலுமில்லை. தங்களுடைய அன்புக்கும் அனுதாபத்துக்கும் ஏற்றபடி நடந்துகொள்ளவேண்டியதே என் கடமையாகும். உன் உயிரையே தாங்கள் காப்பாற்றினீர்கள். ஆதலின் என் உயிரே தங்களுக்குக் கட்டுப்பட்டதாகும். உயிரைக் காப்பாற்றியது மட்டும் விசேஷமல்ல. என் மனதும் துயரக்கடலில் மூழ்கியும், நான் திக்கற்றும் தவித்தபோது மிக்க அனுதாபத்துடனும் தாராளமாகவும் தாங்கள் செய்த உதவிக்கு என்னால் என்ன கைம்மாறு செய்ய முடியப்போகின்றது? ஆகவே என் வாழ்க்கை முழுதும் தங்களுக்குச் சேவைசெய்வதிலேயே கழியுமானால்தான் என் மனம் திருப்தியடைவதுடன் நான்

என் கடமையைச் செய்தவளாவேன். நான் இரத்தினபுரிக்குச் சென்றதும் முதலில் தங்களுக்குக் கடிதம் எழுதிவிட்டே மறுவேலை பார்ப்பேன். நான் இன்னும் அதிகம் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை" என்று பச்சாதாபத்துடனும் உண்மையான அபிமானத்துடனும் கூறினாள்.

அவள் அவ்வாறு கூறியதால், தனக்கு அவள் மனைவியாக வாய்க்கப்போகிறாள் என்பதை அறிந்து சந்தோஷப்பட்டான். அவள் இப்போது துக்கத்துடன் இருப்பதால் காதல் சம்பந்தமாக அதிகநேரம் பேசிக்கொண்டிருக்கக்கூடாதெனக் கருதினான். ஆயினும் அவளிடம் தன்னைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லிக்கொள்ள விரும்பினான். ஆகவே அவளைப்பார்த்து, "மீனா! என் வாழ்க்கையில் நடந்த ஒரு சம்பவத்தை இப்போதே உன்னிடம் தெரிவித்துவிட விரும்புகின்றேன். ஏனெனின், நீ என்னை விவாகம் செய்துகொள்வதென்று நிச்சயித்தபிறகு அச்செய்தி உனக்கு எப்படியாவது தெரிந்து அதனால் நீ உன் எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படலாகாதல்லவா?" என்று கூறினான். இச்சொற்களைக் கேட்டு அவள் திகிலடைந்து என்னசொல்லப்போகிறானோ என்று பிரமையுடன் அவன் முகத்தை உற்றுநோக்கினாள். ஆயினும் அவள் தன் கையை இழுத்துக்கொள்ளாமையால் அவன் தைரியத்துடன் விஷயங்களை அறிவித்தான். அவன் என்ன அறிவித்திருக்க வேண்டுமென்பதை நேயர்கள் யூகித்தறிந்திருக்கலாம். அவன் இரத்தினபுரியில் வேலப்பனிடம் குமாஸ்தாவாக இருந்தபோது சிறிதுதொகை சொந்த பிரயோசனம் செய்துவிட்டதற்காகச் சிறையிலிடப்பட்டதையும், பிறகு அவன் தப்பித்துவந்ததையும் மற்றும் அது சம்பந்தமான முழுவிவரத்தையும் தெரிவித்தான். ஆனால் அவன், தன் சகோதரிக்காகவே அவ்

வளவு கஷ்டங்களையும் அனுபவிக்கநேர்ந்தது என்னும் விவ ரத்தைச் சொல்லியபோது மீனும்பாளின் கண்களில் நீர் ததும்பியது. அவனிடமும் அவனுடைய சகோதரியிடமும் அபிமானமும் அனுதாபமும் அதிகரித்தது. இதனுல் விசுவ நாதனுக்கும், அவள் தன் விஷயத்தில் மாறுன அபிப்பிராயம் கொள்வாளோ என்னும் சந்தேகமும் நீங்கிவிட்டது.

விசுவநாதன் தன் கதையையெல்லாம் சொல்லி முடித்த பின்னர், மீனும்பாள் மெதுவாகவும் நிதானமாகவும், "ஐயா, தாங்கள் என் கடிதத்தையும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கவேண்டியதில்லை. நான் தக்கசமயம் வரும் போது தங்கள் மனைவியாக வாய்ப்பேன் என்பது நிச்சயம். அந்த உறுதிமொழியை இப்போதே கொடுத்துவிடுகிறேன். தாங்கள் காப்பாற்றிய இந்த என் உயிர், தங்கள் வாழ்க்கை யில் தங்கள் துயரத்தையெல்லாம் போக்கி இன்பமாக வைப் பதிலேயே கழிக்கப்படவேண்டும். நான் இனி உங்களுடை யதே'' என்று பரிவுடன் கூறினுள்.

விசுவநாதனும் தன் கையிலிருந்த அவள் காத்தை மெது வாகத் தன் வாய்வரை தூக்கி அக்கையின்மீது மனப்பூர்வ மான ஆவல் நிரம்பிய ஒரு முத்தமிட்டான். அவனுடைய வாழ்க்கையில் அது மிக்க இன்பம்தரக்கூடிய சமயமாக இருந்தது. அவர்களிருவரும் இவ்வாறு பேசிமுடித்த அரை மணி நேரத்துக்குப் பின்னர் அந்த ஓட்டலின்முன் ஒரு குதிரைவண்டி வந்துநின்றது. அதில் மீனும்பாள், இரத்தின புரி பிரயாணத்துக்காக ஏறிக்கொண்டாள். உடனே காத லன் விசுவநாதன் அவளிடம் ஒரு முட்டையைக் கொடுத்து அதில் பிரயாணத்துக்காக பாஸ்போர்ட் என்னும் பிரயாணச் சீட்டுடன் அவளுக்கு வேண்டிய பணமும் இருப்பதாக அன் புடன் அறிவித்தான். அவள் அவனிடம் விடைபெற்றுக்

கொண்டு புறப்பட்டாள். விசுவநாதனும் வேறு வண்டியில் ஏறிக்கொண்டு பரிதிபுரம் செல்லப் பிரயாணப்பட்டான்.

நேயர்காள்! திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை என்பது இச்சம்பவத்தால் நன்கு மெய்ப்பிக்கப்படுகின்றதல்லவா? உற்றார் உறவினரையும், தாயையும், சகோதரிகளையும் இழந்து நடுக்கடலில் தன்னந்தனியாகத் திக்கற்ற நிலைமையில் நின்ற மீனம்பாளுக்கு, ஆபத்பாந்தவனாகிய எல்லாம்வல்ல இறைவனே, விசுவநாதன் என்னும் மனிதன்மூலமாக உதவிசெய்தான். அவள் துயரக்கடலினின்றும் கரையேறியதுடன், அவள் இனி கன்னியாகவே இருந்தால் பல கஷ்டங்களுக்குள்ளாக நேரிடும் என்பதற்காக அவளுக்கு ஒரு நாயகனையும் இறைவன் ஏற்படுத்திவிட்டான். ஆனால் இதில் மற்றொரு விசேஷத்தையும் நாம் அறியாமலிருக்கமுடியாது. மீனம்பாள் பெற்ற இவ்வளவு சமயோசித உதவிக்கும் அவளது நற்குண நற்செய்கைகளே காரணமாகும். இதேமாதிரி ஆபத்தில் அகப்பட்டுக்கொண்ட பலர், தங்கள் துற்குண துற்செய்கை காரணமாக, இறைவன் உதவி கிடைக்கப்பெறாமல் துயாடைகின்றனர். அது அவர்களுக்கு ஏற்படும் தண்டனையேயாகும். உதாரணமாக, நடுக்கடலிலிருந்து தப்பித்துக்கொண்ட மீனம்பாளுடன் அவள் தாயாராகிய மாகதவல்லியும் ஏன் தப்பியிருக்கக்கூடாது? ஆனால் அவள் செய்த தீவினைகளுக்கெல்லாம் தண்டனை அனுபவிக்கவேண்டியிருந்ததால் கடலில் மூழ்கி இறந்தாள். ஆகவே அவரவரும் தங்கள் குணகர்மங்களுக் கேற்பவே இவ்வுலகில் இன்பதுன்பங்களை அனுபவிக்க நேரிடுகிறதென்னும் உண்மையை ஒவ்வொருவரும் அறிந்து தெய்வசம்மதமான நேரிய வாழ்க்கையை நடத்த முயலவேண்டும். இட்டார்க்கு இட்ட பலனேயுண்டு. இவ்வுண்மையை மறுக்க யாராலும் முடியாது. இத்தகைய

கதைகளை வாசிப்பதால் அதனால் ஏற்படும் இப்படிப்பட்ட படிப்பினைகளை யறிந்து நமது வாழ்க்கையைத் திருத்திக் கொள்ளவில்லையென்றால் இவைகளைப் படிப்பதால் யாதொரு பயனுமில்லை. வெறும் வாய் வேதாந்திகளாக இருப்பதிலும் பயனில்லை. அரிய கொள்கைகளை உயரிய வாழ்க்கையில் அனுஷ்டித்துப் பலன் பெறவேண்டியது அறிவுடைய மாந்தர் கடமையாகும்.

181 - வது அத்தியாயம்

ஒருநாள் இரவு சுமார் எட்டுமணிக்கு இரத்தினபுரியில் இளவரசன், தன் மாளிகையின் அறையில்தான் எதிர்பார்க்கும் ஒருவருக்காக மிக ஆவலுடன் காத்திருந்தான். அச்சமயத்தில் அவனுடைய அந்தரங்கக் காவலாளன் ஒருமாதை உள்ளே அழைத்துவந்தான். அவள் விலையுயர்ந்த ஆடையால் முகத்தையும் தேகத்தையும் மூடிக்கொண்டிருந்தாள். காவலாளன் வெளியேபோனதும், அம்மாதை உட்காரும்படி இளவரசன் சமிக்ஞை செய்தான். அவள் அரச சன்னிதானத்தில் வந்ததற்காக மிகவும் லஜ்ஜை யடைபவள் போல் பாவனை காட்டினாள். எனினும் உடனே அவள் தன் முகமூடியை அப்புறப்படுத்தினாள். உடனே இளவரசனும், “ஏன், இதில் ஏதோ தவறு இருக்கிறது. நிச்சயமாக நீ அல்ல” என்று இன்னும் ஏதோ சொல்லப்போனான். அப்போது அம்மாது, “நான் தங்களுக்குச் சேவைசெய்ய விரும்பும் கௌரியேயன்றி வேறில்லை” என்று கூறினாள்.

இளவரசர்:—அப்படியானால் சரி; அகத்தினழகு முகத்தில் தெரியும் என்பார்களல்லவா? அதுபோல நான் எத்

தனைபேர் வந்தாலும் அவரவர்களுடைய முகத்தைக் கண்டமாத்திரத்திலேயே அவர்களுடைய மனோபாவத்தையும் சொல்லிவிடுவேன். ஆனால் பெண்கள் விஷயம் அப்படியல்ல. அவர்கள் தங்களுடைய மனோ உணர்ச்சிகளையெல்லாம் வெளிக்காட்டாதபடி அடக்கிக்கொள்வார்களாதலால் அவர்களைக் கண்டதும் அவர்களுடைய மனோபாவத்தைச் சொல்லமுடியாது. அதிலும் நீ அதிக சாமர்த்தியசாலி என்றும், சாகச குணமுடையவளென்றும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆதலின் உன் சாமர்த்தியத்தை மெச்சாமலிருக்க முடியவில்லை.

கௌரி:—தாங்கள் இவ்வாறு கூறியதைக்கொண்டு நான் மிகவும் கௌரவமடைகிறேன். என் சாமர்த்தியத்தைச் சோதனைசெய்யவே தாங்கள் என்னை வரவழைத்தீர்கள் போலும்.

இள:—ஆம், அப்படித்தான். உட்கார்ந்துகொண்டு இந்தப் பானத்தைக் கொஞ்சம் பருகு. பிறகு நான் சொல்வதைக் கேட்டுக்கொண்டிரு. என் உண்மையான நிலைமையை உன்னிடம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது எப்படிப்பட்ட இன்பமும் எனக்கு ஆனந்தத்தை அளிக்கக்கூடியதாக இல்லை. இத்தேசத்திலுள்ள எத்தனையோ அழகான, யௌவனம் வாய்ந்த மாதர்கள் என் அவாவைத்தணிக்க முன்வந்திருக்கிறார்களென்றாலும் எனக்கு மனப்பூர்வமான இன்பத்தையளித்தவள் ஒருத்தியேதான். அவளோ இனி இப்பக்கம் திரும்புவதில்லையென்னும் பிடிவாதத்துடன் போய்விட்டாள். ஆகவே இப்போது நான் எந்த மாதுடன் கூடி இன்பமனுபவித்தாலும் பூரணமான வெற்றி கிடைப்பதில்லை. நான் கண்ணை அசைத்த

மாத்திரத்தில் வந்துவிட ஆயிரக்கணக்கான மாதர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அதில் ஒருவராவது எனக்கு இல்வாழ்க்கை இன்பத்தில் வெற்றியளிக்கக் கூடியவர்களாயில்லை. எனவே இப்போது எனக்காக ஒரு புதிய சாக்கைக்கண்டு பிடிக்கவேண்டியது உனது கடமையாகும். நீ பிடிக்கும் பெண்மணி நமக்குப் புதியவளாயும், அதிக லஜ்ஜையுடன் இருந்து சம்சர்க்கத்தை மிகப் பிரயாசையின்மீது அளிப்பவளாயும், கற்பிற் கெடாதவளாயும், உயரிய நற்குண நற்செயல்களை யுடையவளாயும் இருக்கவேண்டும். மேலும் நீ முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் மற்றொன்று மிருக்கிறது. அதாவது வியாபாரிகள் வீட்டுப் பெண்ணாக இருந்துவிட்டால் சதாசர்வகாலமும் பணத்தைக் கேட்டுக்கொண்டே யிருப்பார்கள். என்னிடம் இப்போது முன்போலப் பணமும் இல்லை. அன்றியும் இவ்விஷயம் மிகவும் இரகசியமாய் இருக்கவேண்டும். நான் உனக்கு இட்டவேலையின் தன்மையை அறிந்துகொண்டாயா? இதில் தலையிட உனக்கு விருப்பமிருக்கிறதா?

கௌரி:—நான் இதன் தன்மையை நன்றாக உணர்ந்துகொண்டதுடன் இதில் ஈடுபடவும் தயாராக இருக்கிறேன். ஆனால் இது மிகவும் கஷ்டமான வேலையாதலால் இதில் அதிக சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கும். மேலும் இவ்விஷயத்தில் நான் மற்றொரு மாதினுடைய ஒத்துழைப்பைப் பெறவேண்டியதாக இருக்கிறது. அம்மாது உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவள். அவள்மீது ஜனங்களுக்கு எத்தகைய சந்தேகமும் இல்லை. மேலும் அவள் பணக்காரி, அவளுடைய ஒத்

தழைப்பின்றி என்னுல் மட்டும் இக்காரியம் முடியும் என்று நான் நினைக்கவில்லை.

இள:—சரி, உன் இஷ்டப்படி செய். ஆனால் கண்டிப்பாக மிக்க இரகசியத்துடன் இருக்கவேண்டுமென்பதை மட்டும் மறக்கவேண்டாம். நான் விரும்புகிற மாதிரியான பெண்மணி அகப்பட்டதும் அவள் யாருக்காகத்தேவை என்னும் உண்மையைச் சொல்லிவிடாதீர்கள். இந்நக ருக்கப்பாலுள்ள ஒரு இடத்தில் அவளை வைத்துவிட்டு எனக்குச் சொல்லியனுப்பினல் நான் வந்து பார்த்துக் கொள்கிறேன். யாரோ ஒரு பெரிய, உயரிய அந்தஸ் துள்ள பிரபுவுக்குத் தேவை என்று சொல்லுகிருர்கள். அப்போது அவள் என்ன நினைக்கிருள் என்று பார்ப் போம்.

கௌரி:—அப்படியானல் இளவரசராகிய தங்கள் பெயர் ஆரம் பத்திலேயே கூறிவிடலாகாது என்கிறீர்களோ?

இள:—நான் சொல்வதை நீ நன்ருக அறிந்துகொண்டுவிட் டாய் என்றே நினைக்கிறேன். இவ்விடம் இருநூறு பவுன் இருக்கிறது. அதை எடுத்துக்கொள். நீ எனக்கு எவ்வளவுக்கெவ்வளவு சந்தோஷத்தைத் தருகிருயோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாகப் பணத்தைக் கொடுப் பேன்.

கௌரி அத்தொகையைப் புன்சிரிப்புடன் எடுத்துக் கொண்டு இளவரசருக்கு வந்தனம் செலுத்திவிட்டு நேராக அங்கிருந்து புறப்பட்டாள். அப்போது இரவு 10-மணியாக இருந்தும் அவள் கருமத்திலேயே கண்ணுயிருந்தபடியால் சிரமத்தையும் நேரத்தையும் பாராமல் அப்போதே நேராக உலகாம்பாள் என்னும் உலகநாயகியின் மாளிகைக்குச் சென் ருள். அம்மாளிகையின் காவல்காரர்கள் கௌரியை நன்கு

அறிவார்களாதலின், இரவு பத்து மணிக்குமேல் வந்திருந்தும் அவளுக்கு யாதொரு தடையும் சொல்லாமல் உள்ளே அனுமதித்தார்கள். கௌரியும் மாடிமீது ஏறி உலகாம்பாள் இருந்த அறைக்குள் சென்றாள்.

உலகாம்பாளைப்பற்றி நேயர்கள் நன்கு அறிவீர்கள். அவள் சுமார் நாற்பதுவயதான விதவை. அவள் யௌவன வயதில் அதிக அழகுடையவளாய் இருந்தாள். அம்மாது அதிகம் கெட்டுப்போனவளாயிருந்தும் மிக ஜாக்கிரதையாகத் தன் பெயர் கெட்டுப்போகாமல் பார்த்துக்கொண்டாள். அதாவது அவளுடைய செயல்களெல்லாம் மிக இரகசியமாக இருந்தன. அவள் கௌரியின் மூலமாகத்தான் இரகசியமாகக் கள்ளக் காதலர்களைப்பெற்று இன்பம் அனுபவித்து வந்தாள். ஆதலின் அம்மாது கௌரியை அவள் நடுநிசியில் வந்திருந்தும் யாதொரு ஆட்சேபமுமின்றி ஆர்வமுடன் வரவேற்றாள். பிறகு கௌரி அம்மாதினிடம் தனக்கும் இளவரசருக்குமிடையில் நிகழ்ந்த விஷயங்களையெல்லாம் விவரமாகத் தெரிவித்தாள். அதை உலகாம்பாள் மிக்க கவனத்துடன் கேட்டுவந்தாள்.

விவரத்தையெல்லாம் கேட்டபின்னர் உலகாம்பாள், "சரி, இந்த விஷயத்தில் நான் உனக்கு என்ன உதவிசெய்ய முடியுமென நீ எதிர்பார்க்கிறாய். உனக்குச் சகாயம் செய்ய வேண்டுமென்பதற்காக நான் இளவரசருடைய இஷ்டத்துக்கு இணங்கமுடியாது. ஏனெனின், அவர் எவ்வளவு தான் நமக்குக் கொடுப்பதாயிருந்தாலும் விஷயம் வெளியாய்ப் போனால் அதைவிட மானக்கேடு வேறொன்றுமில்லை. மேலும் நான் பணக்காரியாகவே இருப்பதால் அவரிடமிருந்து பணத்தையும் எதிர்பார்க்கவில்லை. அன்றியும் நான் முன்னரே தக்க பதவியையும் அந்தஸ்தையும் அடைந்திருப்பதால் அவ்

வகையிலும் எனக்கொன்றும் வேண்டியதில்லை" என்றுகூறினாள்.

கௌரி:—விஷயம் வெளியாய்விடுமோ என்னும் அச்சம் சிறிதுமில்லாவிட்டால் இளவரசருக்கு உதவிசெய்ய வேண்டுமென்னும் எண்ணத்துடனாவது இம்முயற்சியில் நீ இறங்கலாமல்லவா? இளவரசரே சமீபகாலத்தில் மன்னராக வரப்போவதால் அவருடைய தயை, தாட்சண்யத்தைப் பெற்றுவைப்பது எவ்வளவோ நன்மையைத் தரக்கூடியதாயிற்றே.

உலகாம்பாள்:—வாஸ்தவந்தான். ஆயினும் அவருடைய தயவைப் பெறுவதற்காகவென்று நான் என் மானத்தை இழக்கத்தயாராக இல்லை. ஆனால் விஷயமொன்றும் வெளியாகாதென்று நீ நிச்சயமாகக் கூறுகிறாயே விஷயத்தை எப்படி மறைப்பாய் என்பது எனக்குத் தெரியவில்லை.

கௌரி:—நான் நினைத்தது என்னவென்றால், நாம் இருவரும் சேர்ந்து இளவரசருக்குப் பிரியமான ஒரு பெண்மணியைக் கண்டுபிடித்து அவரிடம் விட்டுவிட்டால், அவள் தனக்கு ஏற்பட்ட கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காக விஷயத்தை இரகசியமாகவைத்துக்கொள்ளத் தன்னாலான முயற்சியையெல்லாம் செய்வாளல்லவா என்பதுதான். அவளை இளவரசரிடம் சேர்ப்பிக்க நாம் செய்யப்போகும் செயல்களை அவள் வெளியிடமுடியாமற்போகும்.

உலகாம்:—நீ சொல்லும் சமாதானம் நியாயமானதாகவே தோன்றுகிறது. இதில் தலையிடுவதால் எனக்கு யாதொராபத்தும் நேரிடாதென்று நிச்சயமாகத் தெரிந்தால் இளவரசருக்காக ஏதேனும் என்னால் இயன்றதைச் செய்ய ஆட்சேபமில்லை.

கௌரி:—இப்போது நீ சொன்னதுதான் புத்திசாலித்தன மான பேச்சு. நீயும் மிகவும் அழகுள்ளவளாயும், வயோ திகபருவம் அடையாதவளாகவுமே இருக்கிறாய். உன் வயதானவர்கள் எத்தனையோபேர் இளவாசர் ஆவலைத் தணிக்க முன்வந்திருக்கின்றனர். ஆகவே இளவாசர் உன்னிடமே மோகங் கொண்டுவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்? ஆகையால் நாம் இதையே முயற்சிப் போம்.

உலகாம்:—ஆம், உலகில் எதிர்பாராத சம்பவங்களெல்லாம் எவ்வளவோ நடைபெறுகின்றன. அம்முறையில் இள வாசர் என்மீதே ஆர்வங்கொண்டாலும் கொள்ளலாம். ஆயினும் அதைப்பற்றி நான் இன்னும் தீர ஆலோ சித்தே பதில் கூறவேண்டும். ஆகவே இரண்டொரு தினங்கள் கழித்து இங்கே வா.

கௌரி:—என தன்புள்ள மாதே! காத்திருப்பதற்கு அவகாச மில்லை. இளவாசருக்குச் சேவைசெய்ய விரும்புவோர் அப்போதைக்கப்போதே காரியங்களைச்செய்து முடித்து விடவேண்டும். ஆதலால் இக்காரியத்தில் முதற்படி யில் நாம் பிரவேசித்துவிடவேண்டும். பிறகு வேண்டு மாயின் நீ சிறிது காலதாமதம் செய்யலாம். இதனால் உனக்கொன்றும் ஆபத்து நேரிடாதென்பதை நான் நிச்சயமாக அறிவிக்கிறேன்.

உலகாம்:—எந்தவிதமாக இப்போதே இதில் இறங்கச்சொல் கிறாய். நான் என்ன செய்யக்கூடும் என்பதை நன்கு விளக்கிச் சொல்.

கௌரி:—உனக்குத் தெரிந்த உயர்குலமாதர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்களல்லவா? அவர்களில் நமது காரியத்

துக்குப் பயன்படக்கூடிய எவரையேனும் நீ தேர்ந் தெடுத்து என்னிடம் தெரிவித்தால் நாம் இருவருமாகச் சேர்ந்து நமது தந்திர மந்திரங்களையெல்லாம் செய்து அவளை வழிக்குக் கொண்டுவந்துவிடலாம்.

உலகாம்:—சரி, நீ என்னசொல்கிறாய், பார்ப்போம். எனக்குத் தெரிந்த ஒரு யௌவனமாது இருக்கிறாள். அவள் உயர்குல மகளாயும், மிக்க அழகானவளாயும், பர புருஷர்களுடைய முகத்தையும் பாராதவளாயும், வெட்கம் அதிக முடையவளாயும் இருக்கிறாள். அவளுடைய குணாதிசயமோ மிக இனிது. இளவாசருக் குடன்படுவ தென்றால் அவள் சம்மதிப்பாள். அவள் மிக வெட்க முடையவளாதலாலும், முன்பின் இதர புருஷர்களைக் கண்டவளல்லவாதலாலும் இளவாசர் மிகச் சிரமப் பட்டே அவளுடைய இன்பத்தை அனுபவிக்கவேண் டியதாயிருக்கும். ஆதலின் அதில் இளவாசருக்கும் அதிக ருசி இருக்கும். இப்பெண் உன் காரியத்துக் கேற்றவளல்லவா?

கௌரி:—ஆம்; இப்படிப்பட்ட குணாதிசயங்கள் பொருந்திய மாதுதான் என் காரியம் பலிக்கும்படி செய்யக்கூடிய வள்.

186564
சென்னை-600 003

உலகாம்:—அப்படியானால் நீ மற்றொரு விஷயத்தை அறிய வேண்டும். அதாவது இப்படிப்பட்ட தன்மைவாய்ந்த மாதர்களை எளிதில் நம்மிஷ்டப்படி ஆட்டமுடியாது. அழகுமட்டும் போதுமென்றால் என்னிடம் எவ்வளவோ பேர் நம் காரியத்துக் கிணங்கக்கூடியவர்களா யிருக் கிறார்கள். ஆனால் அவர்களெல்லோருமே இளவாசர் தொட்டமாத்திரத்தில் எளிதாக உடல் இன்பத்துக்குட் பட்டுவிடுவார்கள். அதனால் இளவாசருக்கு பிரேமை

ஏற்படாது. ஆனால் இவர்களில் யாரையேனும் ஒருத்தியைப் பிடித்து அவளுக்கு சாகசத்தையும் வெட்கத்தையும் கற்பிக்கவேண்டும்.

கௌரி:—இல்லை, அது பிரயோசனமில்லை. இளவரசர் குள்ளநரியைப்போல் மிக்க தந்திரசாலி, மேலும் இவ்விஷயத்தில் அவர் அதிக தேர்ச்சிபெற்றவர். ஆளைப் பார்த்தமாத்திரத்தில் முகத்திலிருந்தே அவளுடைய மனோபாவத்தைப் படித்துவிடுவார். ஒரு பெண்மணியின் முகத்தில் தோன்றும் வெட்கக்குறி இயற்கையானதா அல்லது வெளிவேடத்தா லேற்பட்டதா என்பதை அவர் ஒரு நிமிஷத்தில் கண்டுகொள்வார். ஆகவே இளவரசருக்கு நாம் அறிமுகம் செய்துவைக்கும் பெண் இயற்கையிலேயே பெருந்தன்மை யுடையவளா யிருத்தல் வேண்டும்.

உலகாம்:—ஓ! அப்படியே! அத்தகைய லட்சணங்கள் பலவும் ஒருங்கே அமையப்பெற்ற பெண்ணும் எனக்குத் தெரிந்தவள் ஒருத்தி இருக்கிறாள். ஆனால் அவளுடன் எனக்கு ஏற்பட்டுள்ள பழக்கம் மிகச் சொற்பமே. அவள் யாருடன் வசிக்கிறாளோ அந்த பந்துக்கள் மாளிகைக்கே நான் ஒருமுறை சென்றேன். அப்போது அவளைப் பார்த்ததிலிருந்தும், அவளைப்பற்றிச் சிலர் சொல்லக் கேட்டதிலிருந்தும் அவளே இளவரசருடைய பிரியத்துக்கு ஏற்றவள் என்று முடிவு செய்திருக்கிறேன். அவர் மிகக் கஷ்டப்பட்டுத்தான் அவளுடைய இன்பத்தைப் பெறமுடியும்.

கௌரி:—ஆம்; நானும் இப்படிப்பட்ட லட்சணங்களையுடைய ஒருத்தியைத்தான் தேடியலைகிறேன். இளவரசரிடம் நாம் எப்படியாவது சேர்ப்பித்துவிட்டால் பிறகு அவர்

அவளைச் சரிப்படுத்திக்கொள்வார். நீ கூறும் பெண் மணி யார்?

உலகாம்:—அவளுக்குச் சமீபத்தில் விவாகம் நடக்க ஏற் படாகி நிச்சயார்த்தமும் முடிந்துவிட்டது. அவள் மிக்க அழகுடையவளாயும், சாந்தகுணசீலியாயும், கபடமற் றவளாயும் இருக்கிறுள். பாவம்! அவளை இதில் இழுப் பதால் நான் அவளுக்கு அக்கிரமம் செய்தவளாவேன்.

கௌரி:—என தன்புள்ள மாதே! இக்காரியத்தை நீ எனக்கு முடித்துக் கொடுத்துவிட்டால் நான் உனக்காக ஒரு தக்க புருஷனை ஏற்பாடு செய்வேன். அவன் அளவிலா அழகுடையவனுயும், புத்திசாலியாயும் இருக்கிறுன். உன்னுடன் சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்வதில் அவ னும் அதிக திருப்தியுடையவனுகவே இருப்பான். அவ ஞல் நீ பலவித இன்பங்களையெல்லாம், உன் இஷ்டப் படி இரகசியமாகவே அனுபவிக்கலாம். என் காரி யத்தைமட்டும் முடித்துவிடு.

மேலும் கௌரி அவ்வாடவனைப்பற்றி மிகச் சிலாக்கிய மாகவும் பெருமையாகவும் நீண்டநேரம் சொல்லிவந்ததில், காமவிகாரத்தில் தலைசிறந்த உலகாம்பாளுக்கு அவனிடம் அளவிலா ஆர்வமும் அதிகரித்துக்கொண்டேவந்து, எப்படி யாவது அவனை யடையவேண்டும் என்னும் எண்ணமும் அதிகரித்தது. கௌரி சொன்னதையெல்லாம் அவள் உள்ள படி நம்பினுள். உலகாம்பாளின் ஆர்வம் எல்லை கடந்துவிட் டது. ஆதலின் அவள் கௌரியைப் பார்த்து, "நீ நாளை காலை ஆகாரம் அருந்திவிட்டு இங்கே வா. அப்போது இதைப்பற்றி அதிகமாகப் பேசுவோம். இன்று இரவுமட்டு மாவது நான் இதைப்பற்றி யோசிக்கவேண்டும். மேலும் எனக்குத் தெரிந்தவர்களில் இன்னும் வேறு யாரையேனும்

பிடிக்கலாமா என்றும் யோசிக்கவேண்டியதா யிருக்கிறது. இளவரசர் கரத்தில் தவழ்ந்து விளையாட அனுப்புவதில் யாரைத் தேர்ந்தெடுத்தால் எனக்குச் சிரமம் குறையும் என்பதையும் கவனிக்கவேண்டும். நாளை காலையில் எவ்வளவு சீக்கிரம் வரமுடியுமோ அவ்வளவு விரைவில் வா. அப்போது ஏதேனும் ஒரு முடிவுக்குவருவோம்'' என்று தெரிவித்தாள்.

இதைக்கேட்டு கௌரி திருப்தியடைந்து, தான் இறங்கிய காரியத்தில் வெற்றி ஏற்படும் அறிகுறியைக்கொண்டு சந்தோஷமடைந்ததுடன் தன்னையேதான் பாராட்டிக்கொண்டாள். நண்பர்காள்! கௌரியைப் போன்றவர்களின் பிழைப்பும் ஒரு பிழைப்பா? கள்ளங்கபடமற்ற அபலைகளான பெண்களை இளவரசர்போன்ற காமவிகாரத்தில் மூழ்கியவர்களிடம், எப்படியேனும் ஒப்படைத்து, அதனால் கிடைக்கும் வருவாயைக்கொண்டு கௌரவமாக வாழ்வதும் வாழ்வா? இப்படிப்பட்ட மாதர்கள் என்றென்றும் நரகில் தள்ளப்படுவார்களென்பதை அவர்கள் அறிவதில்லை. இக்காலத்தில் நம் நாட்டிலும் எத்தனையோ அயோக்கிய மாதர்கள் இப்படித்தான் கிராமங்களிலுள்ள பெண்களை ஏமாற்றிச் சென்னை போன்ற நகரங்களுக்கு அழைத்துவந்து கொடிய துன்மார்க்க வாழ்வில் ஈடுபடுத்தி நரகத்தை இங்கேயே அனுபவிக்கும்படி செய்கின்றனர். இத்தகைய அநியாயங்கள் நடக்கும் காலம் விரைவில் ஒழியுமென்றே எதிர்பார்க்கிறோம்.

182 - வது அத்தியாயம்

இப்போது நாம் மற்றொரு காதலர்களுக்கு ஏற்படும் சம்பவங்களைப்பற்றிக் கவனிப்போம். பிரேமநாதம் பிரபு தமது மனைவியுடனும், ஜகதீஸ்வரி என்னும் பெண்மணி யுடனும் இரத்தினபுரியின் சமுத்திரக்கரையோரமாகத் தங் களுக்கிருந்த பங்களாவில் சுமார் 15-தினங்களாக வசித்து வருகின்றார். ஜகதீஸ்வரியின் காதலனான மதுரைநாயகம் பிரபுவும் அங்குவந்து சில தினங்கள்வரை இருப்பதென்றும் பிறகு அவர்களிருவரும் கலியாணம் செய்துகொள்வதென் றும் ஏற்பாடாயிருந்தது. ஜகதீஸ்வரி தன் காதலனை மிக ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் அவளை விட்டுப் பிரிந்திருந்த 15-தினங்களே அவளுக்கு ஒரு யுகம் போல் தோனறிற்று. அவர்கள் இம்மாளிகைக்கு வருமுன் னர் ஜகதீஷ்வரி ஏதோ மனக்கஷ்டம் அடைந்திருந்ததால் அவள் முகம் வெளுத்திருந்தது. ஆகவே இடம் மாற்று வது நலமே என்று மதுரைநாயகமும் எண்ணினான். அவள் இம்மாளிகைக்கு வந்தபின்னர் சமுத்திரக்காற்று தாராளமாக வீசியபடியால் அவள் ஒருவாறு சுகமடைந்து வந்தாள்.

மதுரைநாயகமும் அங்கு வந்துசேர்ந்த இரண்டொரு தினங்களுக்குப் பின்னர் ஒருநாள் மாலை தானும் தனது காத லியுமாகப் பரஸ்பரம் தோள்மீது கைபோட்டுக்கொண்டு சமுத்திரக்கரையோரமாகப் பேசிக்கொண்டே சென்றனர். அப்போது காதலன், "எனதன்புள்ள, ஜகதீஸ்வரி! நீ நாளுக்குநாள் சுகமடைந்து வருவதைக்காண நான் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறேன் தெரியுமா? சென்ற இரண்டு

மாதகாலமாக நான் உனக்காக மிகவும் துக்கமடைந்தேன்" என்றான்.

ஜகதீஸ்வரி:—ஆம்; இப்படி நேர்ந்திருக்குமென்பதை நான் அறிவேன். நீ என்னைப்பற்றி அதிக கவலைப்படுகிறாய் என்று தெரியும்போதெல்லாம் நானும் அதிக துக்கப் படுவது வழக்கம். எனக்கேற்பட்ட மனக்கஷ்டத்தைப் பிறர் அறியாமலிருக்கும்படி மறைக்க என்னாலியன்ற வரை சிரமப்பட்டேன் என்று உறுதிகூறுகிறேன். ஆனால், மனம் இவ்வாழ்க்கையில் வெறுப்பையடைந்து துயர மடையும்போது அதை மறைத்துவைப்பது எவ்வளவு கஷ்டம் தெரியுமா?

மதுரை:—"என தன்புள்ள பெண்ணே! இப்போதாவது நீ சந்தோஷத்துடன் இருப்பதாக உறுதிகூறு" என்று கேட்டுவிட்டு அவளது முகத்தையே அன்புடன் உற்று நோக்கினான்.

ஜகதீஸ்:—"ஆம்; இப்போது நீ என்னுடன் இருப்பதால் நான் சந்தோஷமாகவே இருக்கிறேன்" என்று கூறினா ளென்றாலும் அவள், தனக்கும் தெரியாமல்வந்த பெரு மூச்சை அடக்கிக்கொண்டா ளென்பதுமட்டும் அருகி லிருக்கும் அவனுக்கு நன்கு தெரிந்தது.

மதுரை:—என்; இப்போதுமட்டுமா நான் உன்னருகில் இருக் கிறேன். இரத்தினபுரியின் மத்தியில் பங்களாவில் இருந்த போதும் நான் உன்னுடன்தானே இருந்தேன். அப் போதும் நீ இப்படித்தானே ஏதோ மனக்கஷ்டம் அடைந்திருந்தாய். இதனால் நானும் உனது பந்துக் களும் உனக்காக அதிக கவலையுடன் இருந்தோமல் லவா?

ஜகதீஸ்:—மதுரைநாயகம்! அன்புள்ள நாயகம்! தயவுசெய்து நமது சம்பாஷணையை வேறுவகையில் மாற்றுக்கொள்வோம்.

மதுரை:—ஐயோ கடவுளே! ஏன் கண்ணீர்வடிக்கின்றாய்? நீ அழுதுகொண்டிருக்கிறாய் போலும்! உனக்கென்ன இவ்வளவு துக்கம்? அத்துக்கப் வந்த காரணத்தை என்னிடம் சொல்.

ஜகதீஸ்:—அன்புள்ள காதல! அதைப்பற்றி இப்போது ஒன்றும் கேட்காதே. என் மனதில் என்ன தோன்றியிருக்கிறதென்பதை நீ அறிந்தே இருக்கவேண்டும்.

மதுரை:—ஓ! உன் சிறிய தாயார் உன்னை இரத்தினபுரி அரண்மனைக்கு அழைத்துச் சென்றாளல்லவா? ஓ! அந்தப் பாழும்நாள். ஆ! எனக்குத் தெரிந்தது.

ஜகதீஸ்:—அதைப் பாழும்நாள் என்று சொல்லாதே. அன்றுதான் நாங்கள் இருவரும் அறிமுகமாக நேரிட்டது.

மதுரை:—வாஸ்தவந்தான். ஒரு விஷயத்தில் அந்நாள் நல்ல தினமே. ஆனால் மற்றும் சில காரணங்களுக்காக அந்த நாளைப்பற்றி வருத்தப்படவேண்டியதாகத்தா னிருக்கிறது. அன்புள்ள ஜகதீஸ்வரி! ஏன் இன்னும் அழுதுகொண்டிருக்கிறாய். உன் துக்க உணர்ச்சியை அடக்கிக்கொண்டு சாந்தமாயிரு. துக்க சமாசாரத்தை மறந்துவிடு. எனக்காக மட்டுமல்ல. உன் க்ஷேமத்துக்காகவுமே நான் இவ்வாறு கூறுகிறேன், என்று கூறிக்கொண்டே அவளை அணைத்துக்கொண்டான்.

அவர்கள் சமுத்திர ஓரமாகவே நடந்து சென்றுகொண்டிருக்கையில் அப்பெண்மணி, “அன்புள்ள மதுரைநாயகம்! நான் உன்னை ஆழ்ந்து நேசிக்கிறேன் என்பது உனக்குத்

தெரியுமல்லவா? இவ்வளவு அன்பிருந்தும், எனக்குச் சில சமயங்களில் தோன்றும் துக்கத்தை மறைத்துக்கொள்ள முடியவில்லை. இதனுல் ஏதோ அபாயம் உண்டாகும்போலத் தோன்றுகிறது. எல்லாம் கடவுள் செயலே என்பதில் ஆட்சேபமில்லை. என்னுடைய பிறப்பு எவ்வளவு மர்மமானதோ, அதை எனது பந்துக்களும் எனக்குத் தெரிவியாமல் எப்படி மறைத்து வைத்திருக்கிறுர்களோ, அதுபோலவே இனி நேரும் ஆபத்துகளும் மர்மமானதாகவே இருக்குமென்று தெரிகிறது. ஓ! நான் என் தாயாரின் தவறுதலை நினைக்கும்போதே எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போலிருக்கிறது. அக்கதை எனக்குப் பூராவாகத் தெரியாது. இது சம்பந்தமாக அவள் என்ன கஷ்டங்களையும் துயரத்தையும் அடைந்திருப்பாளோ யார் அறிவர். எனினும் அதை நினைக்கும்போதே எனக்கு மட்டும் மிகக் கஷ்டமாக இருக்கிறது" என்று கூறிக்கொண்டே, தன் காதலன்மீது இருந்த தன் கையை இழுத்துக்கொண்டு தன் முகத்தை இருகரங்களாலும் மூடியவண்ணம் துக்கத்துடன் கண்ணீர்வடித்தாள்.

அப்போது மதுரைநாயகம் பிரபுவும் மிக துக்கமடைந்து, "எனதன்புள்ள ஜகதீஸ்வரி! இப்படியெல்லாம் கவலைக்குள்ளாய்விடாதே. இதெல்லாம் என்னுடைய தப்புதான். இந்த மர்மத்தைக் கண்டுபிடித்து விடுவதாக நான்தானே ஒப்புக்கொண்டேன். நான்தானே அரண்மனைக்குச் சென்று இளவாசரைக் கண்டு பேசினேன். ஆதலின் இந்தத் துக்கத்துக்கெல்லாம் நானே காரணம்! என்றுகூறினுன். அச்சமயத்தில் அவள் குறுக்கிட்டு, "இளவாசர் என் தந்தை" என்றுகூறித் தன் இருகாங்கனையும் அப்புறப்படுத்தினுள். உடனே அவளது அழகியமுகம் மிகவும் வெளுத்துப்போயிருந்ததை மதுரைநாயகம் கண்டான். அவன் உண்மையிலேயே அவளை நேசி

யாமலிருந்திருந்தாலும், அப்போது அவளைக் கண்டிருந்தால், மிக்க அழகிய யௌவனமாதின் முகம் ஒரு நிமிஷத்தில் இவ்வாறு வெளுத்துப்போனதைக் கண்டு துக்கப்படாம லிருந்திருக்கமுடியாது.

ஆகவே அவன் மிக்க பிரீதியுடன், "ஜகதீஸ்வரி! நீ என் இவ்வாறு பேசுகிறாய். உன் பார்வை ஏன் இப்படியாகிவிட்டது. உன் தோற்றத்தில் ஏதோ ஆழ்ந்த துக்கக்குறி காணப்படுகிறதே. உண்மை விஷயத்தை எனக்குத் தெரிவித்துவிடு" என்று பரிவுடன் கேட்டான். பின்னர் அவள் அவன் பக்கத்திலேயே நடந்துகொண்டே பின்வருமாறு கூறினாள்:—
"நான் சொல்வதைக் கவனமாகக் கேள். என் மனதில் துயரத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கும் விஷயத்துக்காக நான் ஓவென்று வாய்விட்டு அலறி அழுதுவிடலாமா என்றும் நினைக்கிறேன். நான் யாருக்காக இவ்வாறு செய்யவேண்டும்? என் இதரபந்துக்களுக்காக இல்லாவிட்டாலும் உனக்காகவேனும் இவ்வாறு அழுது தீர்த்து மனநிம்மதி யடைய வேண்டியதாயிருக்கிறது. இடையில் பேசாமல் கவனமாகக் கேட்டுக்கொண்டிரு. எனது பிறப்பைப்பற்றிய மர்மம் எனக்கு அதிகமாகத் தெரியாதென்றாலும் அதைப்பற்றி நானாக ஏதேனும் நினைத்துக்கொள்ளலாமல்லவா? மதுரைநாயகம்! என் தாயார் பரிசுத்தமானவளாகவே இருந்திருக்கவேண்டும். ஏனெனின் என் சிறிய தாயார் பங்கஜம் அம்மாள் அப்படியெல்லாம் வழி தவறியவளாக இல்லையல்லவா? இருவரும் சகோதரிகளாயிற்றே. ஆகவே அவள் ஏமாற்றப்பட்டிருக்க வேண்டுமென்பது நிச்சயம். அவளை யாரோ காட்டிக்கொடுத்துவிட்டிருக்கவேண்டும். அவளை ஏமாற்றியதும், துரோகம் செய்ததும் யார் என்று தெரியவேண்டும். என் தந்தை என்று சொல்லிக்கொள்கின்ற ஒருவனை, நேசிக்கும்படி

இயற்கை என்னைத் தூண்டுகிறதென்றாலும் அவரை நேசிக்க நான் விரும்பவில்லை. அதுமட்டுமா? அவரைப்பற்றி மரியாதையாக நினைக்கவும் என் மனம் இடம்தரவில்லை. ஏனென்றால் அவர்தான் என் தாயாரைத் துரோகம் செய்தும் ஏமாற்றியும் இருக்கவேண்டுமென நான் நிச்சயமாக நம்புகிறேன். அன்று அரண்மனைக்குச் சென்று இளவரசரைச் சந்தித்தது முதல் அவரிடம் ஒருவிதமான பற்று எனக்கு ஏற்பட்டதென்றாலும், அவரைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் ஒருவிதமான உள்ளக்கிளர்ச்சி ஏற்பட்டு அழலாயா என்னும் எண்ணம் தோன்றுமென்றாலும் உன்பால் ஏற்படும் நேசம் அல்லது ஆர்வத்துக்கு அது வேறுவிதமானதாகவே இருந்தது. என் பிறப்பைப்பற்றிய இரகசியம் எனக்குத் தெரிந்தபிறகுதான் இளவரசரிடம் எனக்கு ஏற்பட்ட பற்று இயற்கையால் தூண்டப்பட்டதென்பதையும், என் பிறப்புக்கே கர்த்தாவான அவரிடம் அத்தகைய பற்று ஏற்பட்டதில் அதிசயமொன்றுமில்லையென்றும் தெரிந்துகொண்டேன். ஆனால் உண்மையில் ஒரு தந்தையை நேசிப்பதுபோலும், மரியாதை செய்வதுபோலும், பக்தி கொள்வதுபோலும் கொள்ளமுடியாத நிலைமை ஏற்பட்டு அதனால் மனவருத்த மடையவேண்டியிருக்கிறதே என்று கவலைப்படுகிறேன். என் தாயார் மனமுடைந்து போய்த்தான் இளவயதில் இறந்துவிட்டாள். ஐயோ பாவம்! அவள் எத்தகைய எண்ணங்களை நினைத்தாளோ? என்ன இன்பங்களை எதிர்பார்த்தாளோ? எல்லாம் ஏமாற்றமடைந்து இறந்துவிட்டாள். ஆகவே என் அன்பான தாயாரின் மாணத்துக்கு காரணம் என் தந்தையே என்று நினைக்கும்போது எத்தகைய உணர்ச்சி ஏற்படும் என்பதைக் கவனித்துப்பார். இதையெல்லாம் சிந்திக்கும்போது நானும் விரைவில் இறந்துபோய் என் தாயாருடன் சேர்ந்துவிடுவதே நலமெனத் தோன்றுகிறது.

பிறகு ஜகதீஸ்வரி பேசுவதை நிறுத்திக்கொண்டாள். ஆனால் பேசவேண்டியதையெல்லாம் பேசியாய்விட்டதென் பதற்காக அவள் பேச்சை நிறுத்தவில்லை. ஆனால் அவளுக் குத் துக்கம் அதிகரித்து தொண்டையை அடைத்துக்கொண் டதால் அவளால் பேசமுடியாமற்போயிற்று. அதைக்கண்ட அவளது காதலனான மதுரைநாயகம்பிரபு அவளை இருகரங் களாலும் வாரித் தன் மார்போடணைத்துக்கொண்டு மனமார அவள் முகத்திலும் மார்பிலும், தோளிலும் பல அன்பான முத்தங்களைத் தந்தான். பின்னர் அவளது முகக்குறியைக் கண்டு அவள் தன்னுடைய உண்மையான அன்பையும் அனு தாபத்தையும் அறிந்துகொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்து மிகவும் சந்தோஷப்பட்டான். ஆயினும் எவ்வளவுதான் தேற்றினாலும் சமாளிக்கமுடியாத அவ்வளவு மனத்துயருடன் அவள் இருந்ததையும் அவன் அறியாமலில்லை.

பின்னர், மேலும் அவள் பேச ஆரம்பித்துக் கூறிய தாவது:—“அன்புள்ள மதுரைநாயகம் பிரபுவே! நான் பழைய விஷயங்களையெல்லாம் நினைத்ததால் ஏற்பட்ட துக் கத்தை அடக்கமுடியாமல் இவ்வாறு மனங்கவல்கின்றேன். இதனால் உனக்கு ஏதேனும் இடையூறோ துயரமோ ஏற்படு மாயின் அதற்காக நீ என்னை மன்னிக்கவேண்டும். ஆனால் என்னைத் துயரத்தில் ஆழ்த்தும் இச்சிந்தனைகள் என் மனோ பலத்தைவிட அதிக பலங்கொண்டவையாக இருக்கின்றன. யாரை இரகசியத்தில் என் தந்தையாகப் பாவிக்கவேண் டுமோ, ஆனால் யாரிடம் எனக்கு உண்மையிலேயே அப்படிப் பட்ட அன்போ மரியாதையோ உண்டாவதில்லையோ அந்த இளவரசர் இருக்கிற இடத்துக்கு வெகுதூரத்தில் இப்போது பதினைந்து தினங்களாக இருப்பதால் நான் ஒருவாறு அவை களையெல்லாம் மறந்து நிம்மதியாக இருந்தேன். ஆனால் இப்

போது இரண்டு மூன்று தினங்களாக எனக்கு மீண்டும் துக்கம் அதிகரித்துவிட்டது. அதை அடக்கிக்கொள்ள வேண்டுமென்றும், அதற்கு இடம் தரக்கூடாதென்றும் நான் எவ்வளவோ முயன்றாலும் முடியவில்லை. எனக்காக இல்லாவிட்டாலும் உனக்கு எத்தகைய கவலையும் தராமலிருக்கும் பொருட்டேனும் நான் என் துக்கத்தை அடக்கிக்கொள்ள வேண்டுமென்று முயற்சித்தேன். ஆனால் இன்று மாலை எப்படியோ என்னால் அடக்கவோ, மறைக்கவோ முடியாதபடி அவ்வளவு அதிகமாக என் துக்கம் அதிகரித்துவிட்டது. ஐயோ, ஐயோ, மதுரைநாயகம்! நான் துக்கத்துக் காளாயிருக்கும்போது நீ சந்தோஷ வாழ்க்கையைப் பெறமுடியாதே என்றுதான் வருந்துகிறேன்''

அப்போது மதுரைநாயகம் அச்சத்துடன், "ஐயோ, கடவுளே! அவ்வாறு பேசாதே. உன்னுடைய பேச்சில் ஏதோ பயங்கர ஆபத்து தொனிக்கின்றது'' என்று கூறினான். அதற்கு அவள், "ஓஹோ! தீர்க்க தரிசனம்போல் காணப்படுகிறதோ? ஆம், ஏதோ மனவெழுச்சியால் இவ்வாறு தோன்றுவதால் அது உண்மையிலேயே நிகழக்கூடியதாகத்தான் இருக்கவேண்டும்'' என்று சொன்னாள்.

அதைக் கேட்ட மதுரைநாயகம்பிரபு உண்மையிலேயே மிக துக்கமடைந்து பின்வருமாறு கூறினான்:—"ஜகதீஸ்வரி! எனக்கு வாயால் சொல்லித் தீர்க்கமுடியாத அவ்வளவு கஷ்டம் உண்டாகிறது. நான் பதினைந்து தினங்கள்வரை உன்னை விட்டுப் பிரிந்து இரத்தினபுரியில் இருந்தபோது காலஞ்சென்ற என் தகப்பனார் சம்பந்தமான பல காரியங்களைக் கவனிக்கவேண்டியதா யிருந்தது. அப்போது பிரேமநாதம்பிரபு எனக்குத் தெரிவித்த தகவல்களிலிருந்து நீ சௌக்கியமாகவே இருப்பதாகஅறிந்து மிகவும் சந்தோஷப்பட்டேன். ஆனால்

நாலைந்து தினங்களுக்குமுன் இங்கு வந்தபோதும் நீ சௌக்கியமாய் இருக்கிறாய் என்னும் எண்ணத்துடன்தான் வந்தேன். அப்படியே நீ ஒருவாறு சுகமடைந்திருந்தது கண்டு உளம் பூரித்தேன். ஒவ்வொரு இரவும் நான் படுக்கைக்குப் போகும்போது, உன்னைச் சௌக்கியமாக வைத்திருக்கும் எல்லாம்வல்ல இறைவனுக்கு வணக்கம் செலுத்திவந்தேன். இன்று மாலை நாம் வழக்கப்படி காற்றுவாங்க உலாவப் புறப்பட்டபோதும், நீ சுகமடைந்து வருவதுபற்றி உன்னைப் பாராட்டிப் பேசலாமென்று நினைத்திருந்தேன். ஆனால் அந்தோ! துக்கமென்னும் கரியமேகம் உன் உள்ளத்தைச் சூழ்ந்துகொண்டுவிட்டது. உன் முகம்பார்க்க முடியவில்லை. அவ்வளவு வெளுத்துப்போய்விட்டது. எனினும் எனது அன்புள்ள காதலி! இனி எனது வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிஷத்தையும் உன் துயரத்தைத் தீர்ப்பதற்கு மார்க்கம் கண்டுபிடிப்பதிலேயே கழியுமென்பது நிச்சயம். மீண்டும் உன் முகத்தில் புன்சிரிப்பு தவழும்படி செய்வதற்கேற்ற வித்தையைக் கற்பதிலேயே என் அறிவு முழுவதையும் செலுத்துவேன்.''

முகம் வெளுத்திருந்தபோதிலும் அழகிற் சிறிதும் குறையாக ஜகதீஸ்வரி, "ஐயா! உன்னுடைய அன்புகூர்ந்த பேச்சு என் உள்ளத்துக்கு உவப்பையே தந்ததென்றாலும், என் மனம் இப்போது அனுபவிக்கும் துயரைப்பார்த்தால் என் காதலனாகிய உனக்கு என்னால் இன்னும் பலவகையான துக்கம் நேரிடுமென்றே நான் அஞ்சுகிறேன். ஏனெனின் கலியாணமானாலொழிய நாம் இருவரும் அதிக ஆனந்தத்தை அடையமுடியாதல்லவா?'' என்று கேட்டாள். அப்போது மதுரைநாயகம்பிரபு மெதுவாகத் தன் கையை அவளது இடுப்பில் போட்டு அவளை அணைத்துக்கொண்டு பின்வருமாறு

கூறினன்:—"அன்புள்ள ஜகதீஸ்வரி! அவ்வாறு பேச வேண்டாமென்று நான் உன்னைக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வுலகிலுள்ள எந்தப் பொருளையும்விட நீதான் எனக்கு அதிகம், நீ எனக்கு இவ்வளவு மதிப்புடையவளாகவே இருக்க வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். உன்னுடைய அழகிய முகத்தையும், கள்ளங்கபடமற்ற பார்வையையும் பார்க்கும்போது, உன் ஒழுங்கான குணாதிசயங்களைக் கவனிக்கும்போது இப்படிப்பட்ட துயரமும் உனக்கு ஏற்பட்டிருக்கிறதே என்று என் மனம் நோகின்றது. ஆனாலும் என தன்புள்ட ஜகதீஸ்வரி! என் கண்ணே! கண்மணியே! நீ அஞ்சவேண்டாம். எல்லாம்வல்ல இறைவன் பாரபட்சமற்றவன். கிருபாமூர்த்தி, எப்படிப்பட்ட துன்பத்துக்கும் பரிகாரம் இவ்வுலகில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆதலின் என் அன்புக்களஞ்சியமாகிய என் காதலே உருவெடுத்தாற்போன்ற உன்னைச் சுற்றிலும் என் கவனம் என்பது சூழ்ந்துகொண்டு உன்னைப் பாதுகாக்கத் தயாராக இருக்கும்போது உன் துக்கம் என்பது எப்படியாயினும் மறைந்தே தீரவேண்டும்."

பின்னர் அம்மங்கை அவன் எதிர்பாராத வகையில் தன் கையை அக்காதலனது கழுத்தைச் சுற்றிலும்போட்டுக் கட்டியணைத்து இனிமையான முத்தமிட்டாள். அவள் அவ்வாறு அவன்மீது சாய்ந்தண்ணம் தன் முகத்தைத் தூக்கி அவனது முகத்தைக் கனிந்த அன்பான பார்வையுடன் நோக்கினாள். தெய்விக அன்பே புலனாவதுபோல் தோன்றிற்று. அப்போது அஸ்தமிக்கும் சமயமாயிருந்த சூரியனின் மஞ்சள் கிரணங்களும் அவளது முகத்தில்பட்டது. அப்போது அவள் மனதில் ஒருவித சந்தோஷ ஒளி தோன்றியதால் அச்சமயத்தில் அவள் ஒரு தேவலோக கன்னிகையைப்போல்

காணப்பட்டாள். அவளுடைய கண்களில் நீர் சொட்டு சொட்டாக வெளிப்பட்டதால் அவை அச்சூரிய வெளிச்சத்தில் வைரம்போல் காணப்பட்டன. அதே சூரியப்பிரகாசம் அவளுடைய கரிய கூந்தலுக்கு ஒருவித பளபளப்பை அளித்தது. இவ்வாறாக அவள் ஒரு அழகிய தங்க பிம்பம்போல் காணப்பட்டாள்.

மதுரைநாயகம் பிரபுவும் ரூபலாவண்யம் மிக்க அம் மங்கையர்க்கரசியை மார்போடணைத்துத் தழுவிக்கொண்டு, "ஆ! அழகிற்சிறந்த ஜகதீஸ்வரியே! நீ இவ்வுலகத்தில் படைக்கப்பட்டவளல்ல. நீ ஒரு தேவலோகக் கன்னிகையே என்பதில் சந்தேகமில்லை" என்று ஆர்வத்துடன் கூறினன். அவள் இவ்வுலகில் பிறந்த சாதாரண மனித ஜன்மத்தைச் சேர்ந்தவளேயாயினும் தன் காதலன் நினைக்கிறபடியே விரைவில் தேவலோகம் சென்று அந்தலோகக் கன்னிகையாய் விடுமோ என்று அஞ்சியதால் அவள் துக்கத்துடன் பெருமூச்சுவிட்டாள். ஆனால் மதுரைநாயகத்துக்கு அது தெரியவில்லை.

அக்காதலர்களிருவரும் சமுத்திரக் கரையோரமாகவே இன்னும் சிறிதுதூரம் நடந்து சென்றார்கள். அப்படிப் போகும்போது ஜகதீஸ்வரியின் மனம் பலவகையிலும் துயரப்பட்டுக்கொண் டிருந்ததென்றாலும் மதுரைநாயகம் அவளிடம் காட்டிய அன்பினாலும் பரிவாலும் அவள் மனம் ஒருவாறு தேறுதலடைந்ததால் அவள் முகத்தில் சிறிது ஒளிவீசலாயிற்று. ஆனல், சிறிதுதூரத்தில் பெருத்த இரைச்சல் உண்டாவதை அவர்களிருவரும் கேட்டார்கள். அது என்னவென்று தெரியவில்லை. உடனே இருவரும் அங்கேயே திக்பிரமையுடன் நின்றார்கள். ஏதோ எதிரில் தோன்றும் அபாயத்தினின்றும் தப்பித்துக்கொள்வதற்காக ஜகதீஸ்வரி தன்

காதலனுடைய மார்புமீது விழுந்து அணைத்துக்கொண்டாள். அதேசமயத்தில் சிறிது தூரத்திலிருந்த ஒரு பெரிய தோட்டத்திலிருந்து ஒரு மனிதன் அதிவேகமாக இவர்களை நோக்கி வருவதைக் கண்டார்கள்.

அப்படி ஓடிவந்த அம்மனிதன் தொழிலாளியைப்போல் காணப்பட்ட அவன், "ஐயோ கடவுளே! பிரேமநாதம்பிரபு நீரில் மூழ்கிவிடுகிறாரே! யாராவது உதவி செய்யக்கூடாதா? ஒரு உயிரைக் காப்பாற்றினால் புண்ணியமல்லவா?" என்று உரக்கக் கூவிக்கொண்டே ஓடிவந்தான். இப்பயங்கரச் செய்தியைக் கேட்டதும் ஜகதீஸ்வரி, ஓவென்றுகூவி அலறிக் கீழேவிழ இருந்தாள். இதற்குள் மதுரைநாயகம் அவளை அணைத்துக்கொண்டதால் அவள் விழாமல் தப்பினாள். அப்போது ஓடிவந்த அந்த ஆள், "உதவி மிக அவசரமாகவேண்டும்" என்று பலமுறை கூக்குரலிட்டான்.

அச்சமயத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதுபற்றி மதுரைநாயகம்பிரபு மேஷரிஷபம் பார்த்துக்கொண்டிருக்கவில்லை, அல்லது காதலியைவிட்டு எப்படிப் பிரிவது என்னும் பெண்மோகத்தில் ஆழ்ந்து போகவில்லை. அல்லது வேறு எவ்விதமான அச்சமும் அவனைத் தடை செய்யவில்லை. அங்கு வெயிற்காலமாகிய அக்காலத்தில் புல்தரை ஈரமாக இல்லாமல் நன்கு உலர்ந்திருந்தபடியால் தன் மார்புமீது தழுவிக்கொண்டிருந்த பெண்மணியை அத்தரைமீது படுக்கவைத்துவிட்டு, ஓடிவந்த ஆள் வழிகாட்ட மதுரைநாயகம் அவன் பின்னாலேயே அத்தோட்டத்துக்குள் சென்றான். மதுரைநாயகம் தோட்டத்திற்குள் நுழைந்ததும் வேறு மூன்று மனிதர்கள், கருப்புத்துணியை முகத்தில் மூடிக்கொண்டவர்களாய் அங்கே தோன்றி திடீரென்று அவன் மீது பாய்ந்து அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்

கள். அவன் இத்தகைய ஆபத்து தனக்கு ஏற்படுமென எதிர்பாராதவனுகையால் அவன் பிரமித்து நின்றுவிடவே அவர்கள் எளிதாக அவனைப் பிடித்து கயிறுபோட்டுக் கை கால்களைக் கட்டி அவனை ஒரு மரத்தில் கட்டிவிட்டார்கள்.

பிறகு அந்த ஆட்கள் நால்வரும், மதுரைநாயகம் ஜகதீஸ்வரியை விட்டுவிட்டு வந்த இடத்தை நோக்கிச் சென்றார்கள். அப்போது மதுரைநாயகம் பிறகு அவர்களுடைய அவசரச் செயல்களைக்கண்டு, "ஐயா! நீங்கள் இவ்வாறு செய்வதன் நோக்கமென்ன? நான் யாருக்கு என்ன தொந்திரவுசெய்தேன். என்னை ஏன் நீங்கள் இவ்வாறு துன்புறுத்தவேண்டும்?" என்று பலவாறு கேட்டான். அவர்கள் எத்தகைய பதிலையும் அளிக்காமல் சென்றார்களென்றாலும் அவர்கள் அவனை எவ்வகையிலும் அடித்துத் தொந்திரவு செய்யாமையாலும், அவனிடமிருந்த எதையும் அபகரித்துக்கொள்ளாததனுலும் அவர்கள் கொள்ளைக்காரர்களல்லவென்றும், இதில் ஏதோ மர்மமிருக்கிறதென்றும் தெரிந்துகொண்டான். இருட்டான அந்தத் தோட்டத்தில் மரத்துடன் மரமாக நிற்கும்படி அவனைச் செய்துவிட்டு அவர்கள் முன்குறிப்பிட்டபடி அப்பெண்மணி இருக்கும் இடத்தை நோக்கி மிக அவசரமாக ஓடினர்கள்.

அவர்கள் ஜகதீஸ்வரியை ஏதோ ஹிம்சை செய்யப் போகிறார்கள் என்று மதுரைநாயகம் உணர்ந்துகொண்டதால் அவன் தன்னை விடுவித்துக் கொள்ளும்பொருட்டு அதிக முயற்சிசெய்தான். ஆயினும் ஒன்றும் பிரயோசனமில்லை. அவன் இழுக்க இழுக்க அக்கயிற்றின் முடிகளெல்லாம் இறுக்க ஆரம்பித்தன. அவர்கள் அவ்வளவு பலமாகவும் பக்குவமாகவும் கட்டிவிட்டிருந்தார்கள். ஆகவே அவன் தான் விடுவித்துக்கொள்ளப் போராடுவதை நிறுத்திவிட்டு அந்த

இருட்டிலும் தோன்றிய சிறு வெளிச்சத்தின் உதவியால் அம்மனிதர்கள் என்ன செய்கிருர்களென்பதைக் கூர்ந்து கவனித்தான். ஆனுல் அவ்வாறு பார்க்கவும் முடியவில்லை. அவன் ஜகதீஸ்வரியைப் புல்தரையில் படுக்கவைத்த இடம் அவன் இருந்த இடத்துக்குத் தூரமாகவும் மறைவாகவும் இருந்தது. என்னசெய்வான் பாவம்! அவன் மனம் படாதபாடுபட்டது. துக்கததினுல் ஏங்கினுன். ஆகவே ஓவென்று கூவி உதவிக்கு அழைத்தான். அவன் கூவிய சத்தத்தின் எதிரொலி கேட்டதேயொழிய யாரும் என்னவென்று கேட்பாரில்லை. இருட்டு அதிகமாய்விட்டது. நிமிஷங்கள் கழிந்து மணிக்கணக்காகியும் அவன் அங்கேயே கட்டுண்டு கிடக்கிருன். அவனை அவிழ்த்துவிடுவாரைக் காணும்.

மேலும் மேலும் அவன் பலமுறை விடுவித்துக்கொள்ள எவ்வளவோ மன்ருடிப்பார்த்தான். ஆனுல் கட்டப்பட்ட கயிறு மிக்க கெட்டியானதாக இருந்ததுடன் கட்டியவர்களும் மிகச் சாமர்த்தியசாலிகள். அவர்கள் மிக அவசரமாக வேலை செய்தார்களென்ருலும் அவசரத்தில் அள்ளித்தெளியாமல் மிக்க ஒழுங்காகவே அவற்றைச் செய்தார்கள். ஜகதீஸ்வரியின் காதலனுன மதுரைநாயகம் கட்டப்பட்ட மரமோ கல்போன்ற உறுதியான மரம். ஆகவே அவன் என்ன பாடுபட்டும் விடுவித்துக்கொள்ள முடியவில்லை. இவ்வாருக இரண்டு மூன்றுமணிநேரம் கழிந்துவிட்டது. மேலும் தனக்கும் ஜகதீஸ்வரிக்கும் இன்னும் என்ன ஆபத்து நேர்ந்துவிடுமோ என்று அஞ்சியதால் அவன் மனமும் ஒருவாறு சோர்வு அடைந்தது. விடுவித்துக்கொள்ள மன்ருடியதால் தேகமும் சோர்வு அடைந்தது. ஆகவே அவனுடைய மனமும் தேகமும் சோர்வு அடைந்துவிட்டதால் அவன் ஒன்றும் செய்யமுடியாமல் அப்படியே அசைவின்றி நின்றுவிட்டான்.

இவ்வாறு இருக்கையில் நடுநிசி வேளையில், மனச் சோர்வினால் மயக்கத்தை யடைந்திருந்த தருணத்தில் சிறிது தூரத்தில் யாரோ நடந்துவரும் சத்தம் கேட்டது. விளக்கு வெளிச்சமும் சமுத்திரக் கரையோரத்தில் அங்குமிங்கும் காணப்படுவதையும் கண்டான். இதைக்கண்டதும் அவன் சிறிது உற்சாகமடைந்து தன் பலமெல்லாம் போட்டு ஓவென்று உதவிக்குக் கூவினான். ஆனால் அவன் சோர் வினால் மெலிந்திருந்ததால் நீண்டநேரம் கூவியபின்னரே அவன் கூவியது பிறருக்குக் கேட்டது. இதன் பயனாக அந்த விளக்கு வெளிச்சம் அவன் இருந்த தோப்பின் பக்க மாகத் திரும்பியது. அதனால் சில மனிதர்கள் கையில் தீ வர்த்தியுடன் வருவதை அவன் கண்டான். சிறிதுநேரத்துக் கெல்லாம் பிரேமநாதம்பிரபுவே தன் வேலைக்காரர்களுடன் தீவர்த்திகளைக்கொண்டு தன்னை நோக்கிவருவதைக் கண் டான். அவர்கள் மதுரைநாயகத்தை அந்த நிலைமையில் கண்டபோது எவ்வாறு ஆச்சரியமும் பீதியும் அடைந்திருப் பார்களென்பதை வாசகர்களே யூகித்தறிந்துகொள்ளலாம். ஆதலின் நாம் அதை விவரிப்பது அவசியமில்லையென்றே கருதுகிறோம்.

மதுரைநாயகம் அவர்களைக் கண்டதும் ஜகதீஸ்வரியைப் பற்றிய தகவலைக் கேட்டான். அவள் மதுரைநாயகத்துடன் உலாவுவதற்காக அன்றுமாலை புறப்பட்டதுமுதல் இதுவரை அகப்படவேயில்லையென்று பிரேமநாதம்பிரபுவே சொன்ன தும் மதுரைநாயகம் விஷயத்தை உணர்ந்தான். தான் நினைத் ததும் எதிர்பார்த்ததும் சரியாய்ப்போயிற்று என்று தெரிந்து கொண்டான். காதலர்களிருவரும் மாலை வெளியில் புறப் பட்டவர்கள் இரவு நீண்டநேரமாகியும் திரும்பிவாராததால் அவர்களுக்கு ஏதோ ஆபத்து நேரிட்டிருக்கவேண்டுமென

நினைத்து பிரேமநாதம்பிரபு தன் ஆட்களுடன் தீவர்த்தியை எடுத்துக்கொண்டு அவர்களைத்தேடப் புறப்பட்டார். அவர்கள் எங்கேபோனர்கள் என்பதைத் தெரிவிப்பதற்குரிய அறிகுறிகள் ஏதேனும் அகப்படாதா என்னும் எண்ணத்தினல் தான் சமுத்திரக் கரையோரத்திலெல்லாம் அலைந்து திரிந்தார்கள்.

பிரேமநாதம்பிரபுவின் ஆட்கள் மிக அவசரமாக மதுரைநாயகம்பிரபுவை அவிழ்த்துவிடவே அவனுக்குச் சிறிது தைரியமும் சந்தோஷமும் ஏற்பட்டது. அந்த ஆட்களில் ஒருவன் ஒரு பாத்திரத்தில் வைத்திருந்த பானத்தை அவனுக்குக் குடிக்கக் கொடுத்ததால் அவன் ஒருவாறு களைப்பையும் தீர்த்துக்கொண்டு உற்சாகமடைந்தான். மதுரைநாயகம் தனக்கு நேர்ந்ததையும், ஜகதீஸ்வரிக்கு என்ன நேர்ந்திருக்குமென்று அவன் நினைத்தானே அவற்றையும் விவரமாகப் பிரேமநாதனிடம் கூறினன். இதனல் ஏதோ சூழ்ச்சி செய்யப்பட்டிருக்கிறதென்னும் முடிவுக்கே எல்லாரும் வந்தார்கள். ஜகதீஸ்வரியை யாரோ வேண்டுமென்றே தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள் என்று தெரிந்துகொண்டார்கள். மதுரைநாயகமும் ஜகதீஸ்வரியும் ஒன்றாக இருந்தபோது அவர்களைப் பிரிக்கவே, அவர்களை நோக்கி ஓடிவந்த ஆள், பிரேமநாதம்பிரபு நீரில் மூழ்கப்போகிறார் என்று பொய்யாகக் கூறினன் என்று தெரிந்துகொண்டார்கள். அந்த அயோக்கியர்களுடைய சூழ்ச்சி நன்கு பலித்துவிட்டதென்பதை நேயர்கள் அறிந்திருக்கிறீர்கள்.

ஆனல் இந்த அக்கிரமத்தைச் செய்தவர்கள் யார்? இதைக் கண்டுபிடிக்கத்தான் யாராலும்முடியவில்லை. உடனே ஜகதீஸ்வரியைத் தேடமுயற்சிக்காமல் யார் இச்சூழ்ச்சி செய்திருப்பார்கள்? ஏன் செய்திருப்பார்களென்று ஆராய்வதற்கு

அவகாசமில்லாமலிருந்தபடியாலும், உடனே அவளை மீட்க வேண்டியது அவசியமாயிருந்தபடியாலும், பிரேமநாதம்பிரபு, தன்னுடைய ஆட்களை நாலாதிக்குகளிலும் அனுப்பி ஜகதீஸ்வரியைத் தேடும்படி கட்டளையிட்டார். அவருடைய ஆட்களும் அப்படியே தேடுவதற்காகப் புறப்பட்டுவிட்டார்கள். பிரேமநாதம்பிரபுவும் மதுரைநாயகமும் மாளிகைக்குத் திரும்பினர்களென்றாலும் ஜகதீஸ்வரியைப்பற்றியே மிக்க கவலையுடன் இருந்தனர்.

அன்பர்காள்! 'ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும்' என்பது பெரியார்கள் வாக்கு. அதுபோல காதலர்களாகிய மதுரைநாயகமும் ஜகதீஸ்வரியும் இன்பம் அநுவிக்கவே சமுத்திரக்கரையோரமாக உலாவச் சென்றனர். மேலும் இரண்டொரு தினங்களுக்குள் கலியாணம் செய்துகொள்வதென்றும் யோசித்திருந்தனர். ஆனால் நடந்த விஷயம் வேறு. அவர்கள் நினைத்தபடி ஒன்றும் நடக்கவில்லை. நமது அறிவுக்கெட்டாத வேறு சக்தியொன்று உலகத்தைத் தன் இஷ்டப்படி நடத்திச்செல்கிறது என்பதற்கு இதுவும் ஓர் உதாரணமல்லவா? இந்த உண்மையைத்தான் நமது பெரியோர்கள், "எல்லாம் அவனையாளும் ஈசன் செயல்" என்று கூறிப்போந்தார்கள். ஆதலின் மக்களனைவரும் நான், எனது என்னும் அகங்கார மமகாரங்களை விட்டொழித்து எல்லாம் அவன் திருவுளப்படி நடக்குமென்னும் திடமான நம்பிக்கையுடன், நம்முடைய கடமையையும் நாம் சிறிதும் தவறாமல் ஆன்றோர் வகுத்தவழியில் நமது வாழ்க்கையை நடத்துவோமாக. முதலில் எவ்வளவுதான் தீமை நேர்வது போல் காணப்படினும் நல்லோர் இறுதியில் நன்மையையே யடைந்துதீர்வர் என்பது நிச்சயம்.

183 - வது அத்தியாயம்

மதுரைநாயகம் பிரபுவின் காதலியாகிய ஜகதீஸ்வரியை அவள் மூர்ச்சை யடைந்துவிட்டதால், அவன் புல் தரையின்மீது படுக்கவைத்தான் என்று மேலே சொல்லப் பட்டதல்லவா? பிறகு அவளுக்கு ஸ்மரணை வந்தபோது பார்த்தால் அவள் ஒரு ஓடும் வண்டியில் படுத்திருப்பதையும் தன்னருகில் இருமாதர்கள் உட்கார்ந்திருப்பதையும் கண் டாள். வண்டியோ மிக வேகமாக ஓடுகிறது. மிகச் சிறிய விளக்கின் உதவியினாலும் அவள் ரஸ்தாவைப்பார்த்து வண்டி எங்கே ஓடுகிறது என்பதையும் தெரிந்துகொள்ள அவளால் முடியவில்லை மேலும் அந்தப் பிரதேசமெல்லாம் அவளுக் குப் புதிதாகவே இருந்தது. தன்னருகில் உட்கார்ந்திருக்கும் இருமாதர்களின் முகத்தையும் அவள் மிகக் கஷ்டப்பட்டே பார்க்கமுடிந்தது.

முதலில் ஜகதீஸ்வரி, தான் ஏதேனும் கனவு காண் கிறாளோ என நினைத்தாள். ஆகவே அவள் தன் கையால் தன் புருவத்தை அழுத்திக்கொண்டு யோசனை செய்தாள். ஆகவே சமுத்திரக்கரையோரத்தில் நடந்ததெல்லாம் ஒவ் வொன்றாக அவளது ஞாபகத்துக்குவந்தது. தான் தன் னுடைய காதலனின் தேகத்தின்மீது அப்படியே மயக்கத் துடன் விழுவதற்குக் காரணமாயிருந்த பயங்கர சப்தமும் அவளது நினைவுக்குவந்தது. ஆகவே அவள் பீதியுடன் ஓவென்று அலறிக்கொண்டே பக்கத்திலிருந்த மாதின் கையைப் பிடித்துக்கொண்டு பைத்தியம் பிடித்தவள்போல், "என் மாமா! பிரேமநாதம்பிரபு! அவருக்கு என்னவேரிட்

டது? உடனே சொல்" என்று கத்தினாள். அப்போது அருகிலிருந்த மாது, "ஏன் குழந்தாய்! உன் மாமா சௌக்கியமாகவே இருக்கிறார் கவலைப்படாதே" என்றுகூறினாள். அவள் கூறிய மாதிரியிலிருந்தும், அவள் தொனியிலிருந்தும் அம்மாது வெறும் காட்டுமிராண்டி யல்லவென்றும், ஏதோ உயர்குலத்தைச் சேர்ந்தவளாகவே இருக்கவேண்டுமென்றும் ஜகதீஸ்வரி தெரிந்துகொண்டாள்.

பிறகு அவள் தன் மனதிலிருந்த பெரியபளுவை ஒழித்துக்கொண்டவளேபோல் ஒருவாறு ஆறுதலடைந்து, "அப்படியானால் கடவுளுக்கு வணக்கம். இப்போது நான் எங்கே போய்க்கொண்டிருக்கிறேன். நீங்கள் யார்? இவ்வளவு வேகமாக வண்டியைத் தூத்திக்கொண்டு போகவேண்டிய அவசியமென்ன? ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது போலத் தோன்றுகிறது. விஷயத்தை மறைத்துவைக்காமல் சொல்லிவிடுங்கள். எனக்கு ஏதோ கஷ்டம் ஏற்படப்போகிறது" என்று கேட்டாள்.

அப்போது அவள் அருகில் உட்கார்ந்திருந்த மாது, "அம்மா! பயப்படாதே. ஆபத்து ஏற்படுமோ என்னும் சந்தேகத்தையும் விட்டுவிடு. எல்லாம் உன்னுடைய நன்மைக்காகவே இவ்வளவும் நடைபெறுகிறது. இப்போது நீ மிதமிஞ்சிய பீதியடைந்திருப்பதால் அதிகமான விவரங்களைப்பற்றிப் பேசுவதற்கு இது சமயமல்ல. மேலும் இவ்வாறு வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் நேரத்தில் அதைப்பற்றிப் பேசவும் முடியாது. மன அமைதியுடனும் சுகமாகவும் இருக்கும்போதுதான் அதைப் பேசலாம். இன்னும் ஒருமணி நேரத்துக்குள் நமது இப்பிரயாணம் முடிந்துவிடும். ஜகதீஸ்வரி! நீ சௌக்கியமாகவும் சுகமாகவும் வைக்கப்படுவாய் என்பதை நிச்சயமாக நம்பு" என்றாள்.

ஜகதீஸ்வரி:—அதெல்லாம் சரிதான். நீயார்? உண்மையில் உனக்கு என்னிடம் நல்லெண்ணமும் விசுவாசமும் உண்மையாய் இருந்தால் என்னை ஏன் இங்கு வைத்து இருக்கிறாய் என்பதை ஒரு நிமிஷமும் காலந்தாழ்த்தா வல் சொல்லிவிட வேண்டுமல்லவா? எனக்கு அச்சத்தைத் தருகின்ற இந்த விஷயம்தானென்ன? விவரமாகக் கூறு.

அம்மாது:—அம்மணி! என் பெயர் காமாட்சி! இதோ உட்கார்ந்திருக்கிறாளே அந்தம்மாள் பெயர் தனம். நான் வசிக்கும் வீட்டின் சொந்தக்காரி அவள்தான். அவள் மிக்க நல்ல சுபாவமும் உதாரகுணமுமுடையவள். உன் விஷயத்தில் அதிக சிரத்தையுடன் நடத்துவாள்.

ஜகதீஸ்:—ஐயோ! பயமாயிருக்கிறதே. உங்கள் இருவர் பெயரையும் நான் கேட்டதில்லையே. என்னை எங்கே எடுத்துக்கொண்டு போகிறீர்கள். என் சிறியதாயாரும் அவரது கணவரும் உங்களுக்கு அனுமதி கொடுத்தார்களா? மதுரைநாயகம்பிரபு எங்கே இருக்கிறார். அவருக்கு ஏதேனும் ஆபத்து உண்டாயிற்றோ? எதையும் காலந்தாழ்த்தாமல் உடனே விவரமாகச் சொல்லிவிடுங்கள்.

காமாட்சி:—அம்மா! பயப்படாதே. அப்படி யொன்றும் நடக்கவே இல்லை. நீ பீதியடைவதற்கோ, துக்கப்படுவதற்கோ எத்தகைய காரணமும் இங்கில்லை.

ஜகதீஸ்:—அப்படியானால் சரி! ஒருவாறு சந்தோஷமும் ஆறுதலும்தான். ஆயினும் நீங்கள் ஏன் இவ்வாறு என்னை அழைத்துச் செல்கிறீர்கள் என்பதை ஒரு வார்த்தையில் சொல்லிவிடுங்கள். இன்றேல் நான் இப்போது ஜன்னல் வழியாக உதவிக்காகக் கூச்சலிடுவேன்.

காமாட்சி:—ஜகதீஸ்வரி! நீ ஆத்திரப்படுவதில் பிரயோசன மில்லை. நான் இப்போது எதையும் விவரமாகக் கூறவே மாட்டேன். ஜன்னல் வழியாக உதவிக்காகக் கூச்ச லிடுவேன் என்கிறாயே அதுவும் பிரயோசனமில்லாத விஷயம். இந்த வண்டியும் ஆட்களும் என்னைச் சேர்ந் தவர்கள். நாங்கள் கொடுத்த கட்டளையின்படிதான் அவர்கள் நடப்பார்களே தவிர நீ கூக்குரலிடுவதால் உன் தொண்டைநோகும் பலன்தான் ஏற்படும்.

இதைக்கேட்ட ஜகதீஸ்வரி! பாவம்! ஒன்றும் சொல்ல முடியாமல் மனக்கவலை யடைந்து துக்கத்துடன் வண்டியின் ஒருமூலையில் சுருட்டிக்கொண்டு படுத்துவிட்டாள். அவள் ஏதோ சூழ்ச்சிக்கும் தந்திரத்துக்கும் உட்பட்டிருக்கிறளென் பது நன்கு விளங்கிவிட்டதென்றாலும் விஷயம் நன்றாகத் தெரியவில்லை. அவள் மிக்க பரிசுத்தமான இருதயமுடை யவளாயும், அதிக வீண்வம்புகளுக்குப் போகாதவளாயும், உலக விவகார அனுபவங்கள் அவ்வளவாக இல்லாதவளாயும் இருந்ததால், சகல துஷ்கிருத்தியங்களையும் செய்யக்கூடிய ஆற்றலையும் அனுபவத்தையும் உடையவர்கள் என்னென்ன சூழ்ச்சிகளையும் சதியாலோசனைகளையும் செய்வார்களென்பது பற்றிச் சிந்திக்கவும் அவளால் முடியவில்லை. ஜகதீஸ்வரியை ஆபாசமான ஒரு வழியில் ஈடுபடுத்தவே பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டு போய்க்கொண்டிருக்கிறார்கள். அவள் தன் ஸ்மரணையை அடைந்த பின்னர் காமாட்சியிடம் நான்கு தடவை விஷயத்தைப் புலப்படுத்தும்படி கேட்டுக்கொண்டும் பயனில்லை. ஆகவே அவள் கண்ணீரை ஆறாகப் பெருக்கிக் கொண்டே அழுதவண்ணம் ஒரு மூலையில் படுத்தாள்.

இப்படி இருக்கும் வேளையில் அவ்வண்டி திடீரென்று நின்றது. வண்டியை செலுத்திக்கொண்டிருந்த ஆள் கீழே

இறங்கி ஒரு நந்தவனத்தின் வாயில்கதவைத் திறந்தான். பிறகு வண்டியும் அந்த நந்தவனத்தில் போடப்பட்டிருந்த கிரேவல் ரஸ்தாவின் வழியே சென்று ஒரு அழகிய மாளிகை யின்முன் நின்றது. உடனே அம்மாளிகையின் கதவும் திறக்கப்பட்டது. விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களை யணிந்த வேலைக்காரர்கள் வெளியேவந்தார்கள். அப்போது காமாட்சி ஜகதீஸ்வரியிடம், "பெண்மணி! உன் நன்மைக்காகவே நீ எதையும் என் வீட்டு ஆட்களிடம் ஒன்றும் கேட்காதே. அவர்கள் என் வேலைக்காரிகளானதால் எதையும் சொல்ல மாட்டார்கள். நீ உன் விஷயத்தை வெளிப்படுத்திக்கொள் வதால் உன்னையே அவர்கள் பரிகசிக்க இடமேற்படும். ஜாக் கிரதை; முன்னதாகவே சொல்லிவிட்டேன்" என்றாள்.

உண்மையிலேயே ஜகதீஸ்வரி மிகவும் பீதியடைந்து எல்லாவகையிலும் நடந்துகொள்ள முடியாதவளாய் இருந்த தால் ஒன்றும் செய்யாமல் பிணம்போல கிடந்தாள். காமாட் சியும் தனமும் சேர்ந்து அவளைப்பிடித்து வண்டியிலிருந்து இறக்கி உள்ளே அழைத்துச் சென்றார்கள். மாளிகையில் மின்சார விளக்குகள் பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தன. கட்டடமோ அழகான கட்டடம். அவர்கள் மாளிகையில் நுழைந்த பின்னரும் அவளை அழகாக அலங்கரிக்கப்பட்ட படிக்கட்டுகளின் வழியே மாடிமீது ஏற்றிச் சென்றார்கள். அவள் மிக துக்கத்துடன் இருந்தபடியால் அவளுக்கு ஒன் றுமே தோன்றவில்லை. மாடிமீது ஒரு அறையில் அவளை உட்காரவைத்தார்கள். அந்த அறை ஒழுங்காக சிங்காரிக் கப்பட்டிருந்தது. அங்கே ஒரு மேஜையின்மீது இனிய தின் பண்டங்களும் பானவகைகளும் வைக்கப்பட்டிருந்தன. ஜக தீஸ்வரியை அங்கிருந்த சோபாவின்மீது உட்கார்ந்துகொண்டு மேஜைமீது வைக்கப்பட்டிருக்கும் ஆகாரவகைகளை அருந்தும் படி காமாட்சி கேட்டுக்கொண்டாள்.

186564

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்தபோதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஞூ பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்குமுன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி இரகசியம் 3-ம், 4-ம், 5-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 6-ம்பாகம் என்கிறநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும் ; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0

வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும்	ரூ.	4	0	
பவளத்தீவு 2 பாகமும்	ரூ.	3	0	
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும்	ரூ.	9	10	0
அர்ஜுனஸிங், சுந்தர்	,,	0	2	0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்		1	12	0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை	ரூ.	1	4	0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும்	,,	3	4	0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்	,,	2	0	0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்	,,	1	12	0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி	,,	2	0	0

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஆ ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப்பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.			
இரத்தினபுரி இரகசியம் 5-பாகமும் ...	10	0	தினகரசுந்தரி ரூபா	1	0
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	ரத்தினாபாய் ...	1	12
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2பாகம் ...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
இராஜாமணி ...	2	0	கமலசேகரன் ...	1	12
ஆனந்தவிங் ...	2	0	பூங்கோதை ...	0	10
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ...	9	10	அமராவதி 2 பாகமும்	4	0
			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
			லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6. லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.